Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உங்களுக்குத் தேவையான நவீன விதமான சன் கிளாஸ், டே அன் நயிட் கிளாஸ், பிளாஸ்டிக் லென்ஸ் போன்ற சகலவிதமான கண்ணாடிகள் 1 மணித்தியாலத்தில் குறைந்த விலையில் செய்துதரப்படும். இலவச கண் பரிசோதனை. பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

ஒளிச்சுடர் மூக்குக் கண்ணாடியகம்

44A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-1239)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 15 (16.07.2003) புதன்கிழமை இதழ்: 287

## லெப்.சீலன், ஆனந்த் நினைவுத்தூபி அல்லாரையில் நேற்று திறந்துவைப்பு



(மீசாலை)

தேசவிடுதலைக்காக தம் உயிர்களை தியாகம் செய்த விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான லெப்.சீலன் மற்றும் வீரவேங்கை ஆனந்த் ஆகியோரின் நினைவாக அல்லாரையில் நினைவுத்தூபி ஒன்று நேற்றுத் திறந்துவைக் கப்பட்டது.

இவ்விரு மாவீரர்களின் 20 ஆவது ஆண்டு நினைவாகவே, மேற்படி நினைவுத் தூபி நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி இரு மாவீரர்கள் வீரச்சாவடைந்த அதேயிடத்திலேயே, இந்த நினைவுத்தூபி அமைக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமாலை 7 மணியளவில், இம்மாவீரர்களின் நினைவு நாளையொட்டிய அஞ்சலிக்கூட்டம் ஆரம்பமாகியது. இந்த அஞ்சலி நிகழ்வின் ஆரம்பத்தில், பொதுச் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து- தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இதனை தொடர்ந்து, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் மலர்விழி மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் ஈகச்சுடர்களை ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து (10 ஆம் பக்கம் பார்க்க)



நாகர்கோவில் சூனியப்பிரதேசத்தில் படையினரின் முகாம்கள் முன்னகர்த்தப்பட்டுள்ளதை கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சனுக்கும், குழுவினருக்கும் கேணல் தீபன் காண்பிக்கிறார்.

# கண்காணிப்புக்குழுவை வெளியேறுமாறு திருமலையில் சிங்களவர் ஆர்ப்பாட்டம்

## தொடர்ந்தும் நடத்தப்போவதாக எச்சரிக்கை

(திருகோணமலை)

**விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்புக்குழு கட்டுப் படுத்த வேண்டும் எனக் கோரி, நேற்று- திருகோணமலையில் சுமார் மூவாயிரம் சிங்கள மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியதுடன், ஹர்த்தாலையும் மேற்கொண்டனர். கண்காணிப்புக் குழுவினர் புலிகளுக்கு ஆதரவளிப்பதால், அவர்கள் விரைவில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.**

நேற்றுக்காலை முதல், திருகோணமலை நகரில்- சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. இதனால், நகரில் கடைகள் மூடப்பட்டிருந்தன.

பஸ் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டு, நகரப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எதிராக இத்தகைய ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தப்போவதாக, ஆர்ப்பாட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை - திருகோணமலை நகரில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இயல்பு நிலை காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## கருத்துக்கணிப்பு ஏற்பாடு

இலங்கையில் காணப்படும் நெருக்கடிகளுக்கு, தேசிய அரசு ஒன்றை அமைப்பதா, இல்லையா- என்ற மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றை சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் நடாத்த திட்டமிட்டுள்ளது.

இந்நாட்டுக்கு என்ன தேவை என்பதை, மக்களிடம் இருந்து அறிந்து கொள்ளவே இக்கருத்துக் கணிப்பு நடத்தப்படவுள்ளதாக அந்த ஒன்றியத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு அமைச்சரின் விஜயத்தையடுத்து

## 20 மில். டொலர் ஆயுதங்கள் இஸ்ரேலிடம் கொள்வனவு!

(ரெல்அவிவ்)

இஸ்ரேலிடமிருந்து சுமார் 20 மில்லியன் பெறுமதியான புதியரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில்- பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத் தளபதி தயா சந்தகிரியும் ஈடுபட்டிருப்பதாக இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படையினர் வசமுள்ள அதிவேகத் தாக்குதல் படகுகளுக்கான ஆயுதங்களே, இந்தக் கொள்வனவில் முக்கியமானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டக்குழு- இஸ்ரேலில் உள்ள விமானத் தொழிற்சாலை, இஸ்ரேலிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் காவியமான மாவீரர்களுக்கு குடாநாடெங்கும் அஞ்சலி நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

சர்வதேசக் கடற்பரப்பில், கடந்தமாதம் கடற்படையினரின் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 12 மாவீரர்களுக்குமான அஞ்சலி நிகழ்வுகள், நேற்றுக் குடாநாடெங்கும் பல பகுதிகளிலும் இடம்பெற்றன.

'சோஷின்' கப்பல் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் யாழ்.நல்லூர் கோட்டத்திற்கான நிகழ்வுகள் நேற்றுமாலை குருநகரில் இடம்பெற்றன.

நேற்றுமாலை 6.30 மணியளவில், வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் - பொதுச்சுடரினை (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாதஸ்வர வித்துவான் பத்மநாதன் நேற்று கொழும்பில் காலமானார்!



(யாழ்ப்பாணம்)

பிரபல நாதஸ்வர வித்துவான் என்.கே. பத்மநாதன் நேற்றுக் கொழும்பில் காலமானார்.

கடும் சுகயீனமுற்றிருந்த இவர், கடந்த இரு வாரங்களாகக் கொழும்பு நவலோக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தவேளை, நேற்றுக் காலை 8 மணிக்குக் காலமானார். இறக்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த உடன்பாட்டில் எமக்கு முழு திருப்தியில்லை

### கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு


(கொழும்பு)

புரிந்துணர்வு போர் நிறுத்த உடன்பாட்டில் தமக்கு முழுமையான திருப்தியில்லை என, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் கொழும்புத் தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடலில் இடம்பெறும் சிக்கலான பிரச்சினைகள்- அங்கு பெரும் மோதலைத் தோற்றுவிக்கலாம் என்பதைக் கடற்படையினரும், கடற்புலிகளும் நன்கு அறிந்துள்ளனர். கடலில் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பழையபடி வேதாளம் முருக்க மரத்தில ஏறுதோ...?

## வடமராட்சியின் பல பகுதிகளில் படையினர் கடும் சோதனை!

(வடமராட்சி)

நெல்லியடி - வதிரிச் சந்தியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்திற்கு அண்மையில்- படையினரும், பொலிஸாரும் இணைந்து நேற்று வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை இப்பகுதிக்கு வந்த இருபதுக்கு மேற்பட்ட படையினரும், பொலிஸாரும்- வீதியால் சென்ற மக்களை வழிமறித்து, சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். படையினர்- பொதுமக்களின் அடையாள அட்டைகளைப் பார்வையிட்டதுடன், சந்தேகத்திற்கிடமான சிலரை உடற்பரிசோதனைக்கு உட்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, உடனடியாக விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation எக்ஸ்போ

Expo Aviation (Pvt) Ltd.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999

071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -975)






சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலை கடற்படையினர் தாக்கியழித்தபோது - வீரச்சாவைத்தழுவிக்கொண்ட 12 மாவீரர்களுக்குமான அஞ்சலி நிகழ்வுகள் - நேற்றுமாலை குருநகரில் நடைபெற்றபோது - மக்கள் அஞ்சலிக்காக, 12 மாவீரர்களின் உருவப்படங்களும் அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருப்பதை முதற்படத்திலும், மாவீரர் ஒருவரின் தந்தை லெப்.கேணல் அன்புக்குமரனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றுவதை இரண்டாவது படத்திலும், 12 மாவீரர்களின் உருவப்படங்களுக்கு போராளிகள் மலரஞ்சலி செலுத்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படம் - தே.லிவிங்ஸ்டன்)

## தேசிய அடையாள அட்டை வழங்கும்
# பிரதேச நடமாடும் சேவைகளில் பெருமளவானோர் விண்ணப்பம்

(நெல்லியடி)

யாழ்.குடாநாட்டில் இதுவரை அடையாள அட்டை பெறாதவர்களின் நன்மைகருதி, தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் கரவெட்டி, கோப்பாய், பருத்தித்துறை பிரதேச செயலகங்களில் இடம்பெற்றது.

ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் செல்வி ஆர்.எஸ்.துரைராஜா தலைமையில் - பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய் ஆகிய மூன்று பிரதேச செயலகங்களிலும் நேற்று முன்தினம் ஒரே நேரத்தில் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையின் மூலம் அடையாள அட்டை பெறுவதில் மக்களுக்கு இருந்த பல்வேறு பிரச்சினைகளைத் தம்மால் இலகுவாகத் தீர்க்கக்கூடியதாக இருந்ததாக, ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நடமாடும் சேவையில் - கரவெட்டி பிரதேச செயலகத்தில் 479 விண்ணப்பங்களும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் 505 விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

நடமாடும் சேவையில் விண்ணப்பித்தவர்களுக்கான அடையாள அட்டைகள், மூன்று வாரங்களுககுள் வழங்கப்பட்டு விடுமெனவும், இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் யாழ்.செயலகத்தின் ஆட்பதிவுத் திணைக்களத்தில், செயலக நேரத்தில் தமது விண்ணப்பங்களைக் கையளிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டுக்குப்பின் இடம்பெயர்ந்து, வன்னியிலிருந்து விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் அடையாள அட்டைகளும் - யாழ். மாவட்ட ஆட்பதிவுத் திணைக்களத்தில் உள்ளது எனவும், உரியவர்கள் உடனடியாக அவற்றைப் பெற்றுக்கொள்ளும்படியும் ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (113)

## 'தாயகம்' இதழ் அறிமுக விழா

'தாயகம்' - கலை, இலக்கிய, சமூக விஞ்ஞான இதழ் அறிமுகமும், விமர்சனமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு, யாழ்ப்பாணம் ஆரியகுளச் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், விமாசன உரைகளை யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் வி.பி. சிவநாதன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் சி.குமரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு - கரவெட்டிப் பிரதேச சபையும், கரவெட்டி சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் சனசமூக நிலையங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள், இன்று காலை 8 மணிமுதல் கரணவாய் அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

செற்றப் முறையில் நடைபெறும் இன்றைய போட்டிகளில் பதினொரு சனசமூக நிலைய அணிகள் பங்குபற்றவுள்ளன.

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

றோணியோ இயந்திரம் Super Fax 350 மொடல் மற்றும் தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு கோபுர வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (சி-1233)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த

பாறை
Same Time
Night - English Show
(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த A.V.M இன்

10.30, 2.30, 6.30.9.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
இயக்கம்: விக்ரமன

## மாதகல் பகுதியில்
# புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா கடன் வசதி!

(யாழ்ப்பாணம்)

கடந்த மே மாதம் வீசிய புயலினால், மாதகல் பகுதியில் சேதமடைந்த மீனவர்களின் வள்ளங்களைத் திருத்துவதற்காக, பத்து மீனவர்களுக்கு பன்னிரெண்டு மாத தவணை அடிப்படையில் தலா 25 ஆயிரம் ரூபா வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

லூர்த்துமேரி, சென். தோமஸ் ஆகிய இரு கடற்தொழிலாளர் சங்கங்களின் ஊடாகவே, இக்கடன் வசதிக்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்றது. இக்கடன் வசதியைப் பெற்ற மீனவர்கள், பன்னிரண்டு மாதத்திற்குள் தவணை அடிப்படையில் கடனை மீளச் செலுத்தவேண்டியது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதற்கு முன்னரும் மீன்பிடிப் படகுகளின் வெளி இணைப்பு இயந்திரங்களை வாங்குவதற்கு, பத்து மீனவர்களுக்குத் தலா ஒருலட்சத்து எட்டாயிரம் ரூபா கடன் வசதி செய்துகொடுக்கப்பட்டதாகவும், அப்பணத்தினை மீனவர்கள் தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்தி வருவதாகவும், வடமாகாண கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரெட்ணம் தெரிவித்தார்.

# உடுத்துறையில் 150 குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் வழங்கப்படவுள்ளது

## யு.என்.எச்.சி.ஆர் நடவடிக்கை

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் - யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது. இதன் அடிப்படையில் முதற்கட்டமாக வீட்டு வசதிகளற்ற 150 குடும்பங்களுக்கு, 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

மேலும், இக்கிராமத்தில் சனசமூக நிலையங்களைப் புனரமைத்துக் கொடுக்கவுள்ளதுடன், மலசல கூடங்களையும் அமைத்துக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இதனைவிட - இப்பிரதேசத்தில் உள்ள உடுத்துறை மகாவித்தியாலயம், தாளையடி றோ.க.த.க பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை ஆகியவற்றிற்கு தற்காலிக கொட்டகைகளையும் யு.என்.எச்.சி. ஆர் அமைக்கவுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகள் குழு - இப்பிரதேசத்தில் இயங்கும் புனரமைப்புக் குழுவினருடன், இப்பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மக்களுடன் கலந்துரையாடி இம்முடிவுகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (122)

# ப்ரெஞ்சு பாதுகாப்பு அதிகாரி மட்டக்களப்புக்கு வருகிறார்!

(கொழும்பு)

பாகிஸ்தானில் உள்ள, பிரான்ஸ் தூதரக பாதுகாப்பு அதிகாரி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கேணல் ஜின்பியாரே ரெஸ் என்ற இந்த அதிகாரி - எதிர்வரும் 21 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அங்கு இராணுவ, பொலிஸ் அதிகாரிகளைச் சந்திப்பதோடு, போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

இவர், மின்னேரியாவில் உள்ள 23 ஆவது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் பாலசூரியவையும் சந்திப்பார் எனத் தெரியவருகிறது.

மாபெரும் புத்தகம் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
புத்தகம் புத்தகம்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள புத்தகக் கடல். 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள். ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரங்களும் ரூபா 10/= - ரூபா 100/= வரை பெற்றுக்கொள்ளலாம். இவைதவிர எம்மிடம் பாடசாலை, அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழி பொருட்கள், மூலப் பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைக்களுக்கு இலவச விநியோகசேவை. உங்கள் தேவை எதுவானாலும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2225542
(சி-1148)

# இராஜதந்திர அனுபவமற்றவர்கள் இலங்கை வெளியுறவுச் சேவையில்!

## தூதர்களை நியமிக்கவும் எழுகிறது நெருக்கடி

இலங்கையின் வெளியுறவுச் சேவைகளில் பணிபுரிவதற்கு, உரிய தராதரம்மிக்க அதிகாரிகளுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவிவருவதாகக் கூறப்படுகின்றது. இதனால், வெளிநாட்டுத் தூதரகங்களிலும், இலங்கை வெளியுறவு அமைச்சிலும் பணியாற்றுவதற்கு இராஜதந்திரப் பணியில் ஈடுபடாத அதிகாரிகளையும், ஓய்வுபெற்ற இராஜதந்திரிகளையுமே ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவேண்டிய நெருக்கடி எழுந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்த நெருக்கடியினால், இலங்கையின் வெளியுறவுச் சேவைகளின் கீழ் வெளிநாடுகளில் தூதுவர்களாகப் பணியாற்றி வருபவர்களில், மிகக் குறைவான வீதத்தினரே இராஜதந்திர சேவையில் அனுபவத்தைப் பெற்றவர்களாக இருப்பது தெரியவந்துள்ளது.

இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, ஓய்வுபெற்ற இராஜதந்திரிகளை மீண்டும் சேவைக்கு அழைக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளையில், ஓய்வுபெற்ற இராஜதந்திரிகளை மீண்டும் பணிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுமிடத்து- அவர்களை இராஜதந்திர சேவையில இல்லாதவர்கள் பணிபுரியும், முக்கியமான பதவிகளில் இடம்மாற்றிக்கொள்ளும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, இஸ்ரேல் தலைநகர் ரெல்அவிவ்வில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றிவந்த முக்கிய அதிகாரிகள் பலரும், தற்போது இடமாற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் நாடு திரும்புமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, உரிய தராதரமுள்ள அதிகாரிகள் இல்லாமையால், இராஜதந்திர சேவையில் அனுபவம் கொண்ட வெளிநாட்டுத் தூதுவரொருவரே - பல நாடுகளுக்குமான விடயங்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை சார்பாக பல்வேறு நாடுகளில் பணியாற்றிவரும் பன்னிரெண்டு உயர்ஸ்தானிகர்கள், ஒரு பிரதி உயர்ஸ்தானிகர், 31 தூதரக முக்கியஸ்தர்கள் ஆகியோர் இராஜதந்திர அனுபவம் இல்லாமலேயே பணியாற்றி வருவதாகவும் தெரியவருகிறது. குறிப்பாக - தென்னாபிரிக்கா, கனடா, மாலைதீவு ஆகிய நாடுகளில் தூதுவர்களாகப் பணியாற்றி வருபவர்கள் - இராஜதந்திர அனுபவம் இல்லாதவர்கள் எனவும் கூறப்படுகின்றது.





வடக்கு - கிழக்கு மாகாணங்களை உடனடியாகப் பிரிக்கவேண்டுமெனக் கோரி, 'சிங்கள சங்விதானய' இயக்கத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகள்- திருமலை நகரின் சந்திப்பகுதியில், கையெழுத்து வேட்டையில் கடந்த ஞாயிறன்று ஈடுபட்டிருந்ததைப் படத்தில் காணலாம்.

## படைகளுக்கான புதிய ஆட்திரட்டல் இம்மாத இறுதியில்!

(கொழும்பு)

அரசு, புதிதாகப் படையினருக்கான ஆட்திரட்டலை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

படையினருக்கான புதிய ஆட்சேர்ப்பு, இம்மாத இறுதியில் அல்லது ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.

## முல்லை மாவட்டத்தில் தொழில்நுட்ப அலுவலர் பற்றாக்குறை!

(முல்லைத்தீவு)

கட்டுமான அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப அலுவலர்கள் - முல்லை மாவட்டத்தில் பற்றாக்குறையாக உள்ளனர் என்று, முல்லை மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதனால், அபிவிருத்திப் பணிகள் தேக்கநிலை அடைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் பணிபுரிய விரும்பும் தொழில்நுட்பத் தராதரம் உடையவர்கள் அல்லது தொழில்நுட்ப சேவையில் இருந்து இளைப்பாறியவர்கள் - கடிதம் மூலமோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்குமாறு, முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார்.

## திருமலை எண்ணெய்க் குதங்கள் மற்றொரு வெளிநாட்டுக் கம்பனிக்கும்!

### படிப்படியாக கைவிட்டுப்போகும் அவலம்

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான - திருகோணமலையில் உள்ள 100 எண்ணெய்க் குதங்களை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இங்கு மொத்தமாக 360 குதங்கள் உள்ளன, இதில் இந்தியன் ஒயில நிறுவனத்துக்கு 100 குதங்கள் விற்கப்பட்டு, அந்நிறுவனம் தற்பொழுது வியாபாரத்தை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, மேலும் 100 குதங்களை விற்பது சம்பந்தமாக 'பேர்க்' என்ற வெளிநாட்டு ஸ்தாபனத்துடன் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், 160 எண்ணெய்க் குதங்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தம்வசம் வைத்திருக்கப்போவதாகவும் - கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அம்பாறைத் தமிழ்க் கிராமங்களில் மீண்டும் மக்கள் குடியமர்வு ஆரம்பம்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால், தமிழ்மக்கள் முற்றாக இடம்பெயர்ந்துள்ள மூன்று கிராமங்களில் - அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான, முதற்கட்ட நிதியுதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

தங்கவேலாயுதபுரம், சாகாமம், கஞ்சிகுடிச்சாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கே மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக இருபத்தையாயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

456 குடும்பங்களைக் கொண்ட கஞ்சிகுடிச்சாறில் - முதற்கட்டமாக 96 குடும்பங்களுக்கும், 235 குடும்பங்களைக் கொண்ட சாகாமத்தில்- 50 குடும்பங்களுக்கும், 436 குடும்பங்களைக்கொண்ட தங்கவேலாயுதபுரத்தில்- 92 குடும்பங்களுக்கும், இந்த மீள்குடியமர்வுக் கொடுப்பனவு நிகொட் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

170 குடும்பங்களைக் கொண்ட தாண்டியடி கிராமத்தில், மாதிரிக் கிராமம் ஒன்றை இத்திட்டத்தின்கீழ் அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

## தொழிற்சங்கங்களை வசமாக்க மகிந்த ராஜபக்ஷ பெருமுயற்சி!



இலங்கையிலுள்ள தொழிற் சங்கங்களில் அநேகமானவற்றை ஒன்றிணைக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தீவிர நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்களின் உரிமை பறிப்பு, தொழிற்சங்க உரிமைகளைக் கட்டுப்படுத்தல், அரசாங்க நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தல், சம்பள உயர்வு வழங்கப்படாமை, ஓய்வூதியம் நிறுத்தப்பட்டமை ஆகிய காரணங்களை முன்வைத்தே, இந்தத் தொழிற்சங்கங்களை ஒன்றிணைப்பதற்கு அவர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

இதற்காக - பொதுஜன ஐக்கிய முன்னணி தொழிற்சங்கங்களோடு மட்டுமல்லாது, ஐக்கிய தேசிய முன்னணியின் தொழிற்சங்கங்களோடும் மற்றும் வர்த்த சங்கம், வங்கி ஊழியர் சங்கம் ஆகியவற்றோடும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடிவருவதாகத் தெரியவருகின்றது.

## நோர்வே மாணவர்களிடமிருந்து வடக்கு - கிழக்கு கல்விக்கு உதவி!

வடக்கு - கிழக்கில் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு, 4 மில்லியன் ரூபாவைத் திரட்டுவதற்கு நோர்வே மாணவர் சங்கம் ஒன்று முன்வந்துள்ளது.

"ஒப்ரேசன் - டோவோர்க்" என்ற பெயரிலே இந்த நிதி திரட்டுவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

'அன்டர்சன் டுவேட்' என்ற நோர்வே மாணவர் சங்கப் பிரதிநிதி இதற்காகக் கொழும்பு வந்துள்ளார். இவர், வடக்கு - கிழக்கில் உள்ள மாணவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுமுள்ளார்.

## இலங்கையில் பாவனையில் இல்லாத புதிய ரகத் துப்பாக்கியொன்று மீட்பு!

புதிய நவீனரகக் கைத்துப்பாக்கியொன்றினை, தலங்கம பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தத் துப்பாக்கி அதிநவீனமான - புதிய ரகத்தைச் சேர்ந்தது எனவும், இதுபோன்ற துப்பாக்கி இதுவரை இலங்கையில் பாவனையில் இருந்ததில்லை எனவும், மேல் மாகாண தெற்குப்பகுதிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி.பத்திரன தெரிவித்துள்ளார்.

இத்துப்பாக்கியை வைத்திருந்தது தொடர்பாக இரு சந்தேகநபர்களைத் தலங்கம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை - அண்மையில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கியையும், தலங்கம பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தலங்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்டுப்பிரதேசத்தில் இத்துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.

## நாடளாவியரீதியில் கோழி இறைச்சி விலையைக் குறைக்க நடவடிக்கை!

### குளிரூட்டிப் பாதுகாக்கப்பட்ட இறைச்சி இனி 150 ரூபாவாகும்

(கொழும்பு)

நாடளாவியரீதியில் கோழி இறைச்சியை நுகர்வோர், கொள்வனவு செய்வதற்கு ஏற்றவகையில்- கோழி இறைச்சியின் விலையைக் குறைத்துக் கொள்வதற்கு ஏற்றநடவடிக்கைகளை நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டிருக்கிறது.

இதன்படி, உச்ச விலையிலிருந்த குளிரூட்டிப் பாதுகாக்கப்பட்ட கோழி இறைச்சியின் விலை, கிலோ ஒன்றுக்கு 150 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருப்பதாக, வர்த்தகர் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாடளாவியரீதியில் கோழி இறைச்சியின் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டிருப்பதாக, நுகர்வோர் தெரிவித்த புகார்களைத் தொடர்ந்தே- அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

கோழி வளர்ப்பாளர்கள் சங்கத்துடன் - வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவும், விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ். பி.திஸநாயக்கவும் நடத்திய கலந்துரையாடல்களின் அடிப்படையில் - தற்போது இந்த விலைக் குறைப்பைச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இதேவேளையில், அமெரிக்காவிலிருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்யும்போது, கிலோ ஒன்றுக்கு 115 ரூபாப்படி, இறக்குமதி செய்யலாம் என்ற செய்தியும் வெளியாகியிருக்கிறது.

நாடளாவியரீதியில் கோழி இறைச்சி குறிப்பிட்ட விலைக்குறைப்புடன் விற்பனையாவதை உறுதிப்படுத்தும்முகமாக - தகுந்த கண்காணிப்புக்களும் மேற்கொள்ளப்பட இருப்பதாக, நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இரத்ததானம் செய்வோம்!



இன்று ஒருவன் வாழ்கின்றான் நீங்கள் கொடுத்த இரத்தத்தினால்,
நாளை ஒருவன் வாழ்வான் நீங்கள் கொடுக்கும் இரத்தத்தினால்.

உணர்வுள்ளோர் வாருங்கள் இவ் உறவுகளுக்கு உயிர் தாருங்கள்.

இரத்த வங்கி,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# யாழில் காணாமற்போனவர்களில் பலர் கைதானதற்கு ஆதாரங்கள் இல்லை!

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் காணாமற் போனவர்கள், மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள நூற்றுக்கணக்கானவர்கள் - எவராலும் கைது செய்யப்பட்டது தொடர்பாகப் போதிய ஆதாரங்கள் எதுவுமில்லாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனவர்கள் தொடர்பாகக் கிடைத்துள்ள 330 பேரினதும் விபரங்களைப் பற்றியும்- அவர்களுடைய உறவினர்களிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளைத் தொடர்ந்து நடாத்தி வருகிறது.

இதனடிப்படையில், காணாமற் போன சிலர், எவராலும் கைது செய்யப்பட்டதற்குரிய போதிய ஆதாரங்கள் எதுவுமின்மையால், அவர்கள் எவ்வாறு காணாமற் போயுள்ளனர் என்பதை அறிவதில் சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாகவும்,

ஆனால், மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரியவருகின்றது.

யாழ்.குடாநாட்டில் காணமற் போனவர்களைப் பற்றிய விபரங்களைப்பெறும் பொருட்டும், அது பற்றிய பூரணமான தகவல்களைப் பெறுவது தொடர்பாகவும் - யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏ-9 வீதியில் 10 இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்படும்

ஏ - 9 வீதியில், பளை தொடக்கம் முகமாலை வரையான- வீதியின் இருமருங்கிலும் கண்ணிவெடிகள் உள்ள 10 இடங்களை, மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினர் இனங்கண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த நெடுஞ்சாலையின் இருமருங்கிலும், இனங்காணப்பட்ட 10 இடங்களிலுமுள்ள கண்ணிவெடிகளை அகற்ற, ஹலோ ட்ரஸ்ற் நிறுவனம், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்குத் தேவையான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

ஏ - 9 நெடுஞ்சாலையின் இரு புறங்களிலுமுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, அது - அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (122)

## நிறுவனமாக்கலை எதிர்த்து பகிஷ்கரிப்பில் ஈடுபடும்

# சித்த மருத்துவ மாணவர் போராட்டத்திற்கு பல்கலை மாணவர் ஒன்றியம் ஆதரவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறையை நிறுவனமாக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சித்த மருத்துவத்துறை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு - யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சித்த மருத்துவத்துறை- நிறுவனமாக்கப்பட்டால், அதன் தரம் குன்றிவிடும் என மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர். அத்துடன், பல்கலைக்கழக நிர்வாகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டால் விளையாட்டு, நாடகம், நூலகம் போன்றவற்றில் முழுமையாகப் பல்கலைக்கழகத்துடன், இணைந்து செயற்படமுடியாது போகும்.

சித்த மருத்துவத்துறையைத் தனியொரு பீடமாக்கினால், அது ஏனைய பீடங்கள் போன்று வளர்ச்சிபெற்றுவிடும். இதன்மூலம் எம்மக்களின் சுதேச வைத்தியத்துறையைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன மூலம், சுதேச வைத்தியத்துறை வளர்ச்சிபெற்றுவிடும்.

எனவே, சித்த மருத்துவத்துறையை நிறுவனமாக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், சித்த மருத்துவ மாணவர்களின் நியாயமான கோரிக்கைக்குத் தாம் பூரண ஆதரவு தெரிவிப்பதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




வாசுகி சொக்கலிங்கத்தின் 'மருதத்திணை' நூல் வெளியீட்டுவிழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது - அதில் கலந்துகொண்ட ஆசிரியை இராசலட்சுமி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.




இணுவையூர் உத்திரனின் 'நிறங்கள' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட- பொது நூலகத் தலைவர் சசிக்குமார், கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம், கலாநிதி சொக்கலிங்கம், பேராசிரியர் கிருஷ்ணராஜா, நூலாசிரியர் உத்திரன் ஆகியோரையும், வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.

## சமாதானத்தில் பெண்கள் பங்கு; கருத்தரங்கு

சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில், பெண்களின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் என்பதுபற்றி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக - மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடுசெய்துள்ள கருத்தரங்கு, எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் - அரசசார்பற்ற நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றிலிருந்து பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வாழ்வகத்தின் ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வாழ்வகம் விழிப்புலனை வலுவிழந்தோர் இல்லத்தின் 15 ஆவது ஆண்டு விழாவும், மலர் வெளியீடும் எதிர்வரும் 20 ஆம் திகதி - ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் செல்வி. அ.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாகச் செயலாளர் கமலா சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜனா இருதயநாதன் சிறப்பு விருந்தினராகவும், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சிகை ஒப்பனையாளர்கள் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# புறநிலை அலகின் திரைப்படக் காட்சி

யாழ்.பல்லைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில், வாரந்தோறும் இடம்பெற்றுவரும் கலைத்துவ திரைப்படக்காட்சித் தொடரில், எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்குப் புவியியற் துறை மண்டபத்தில் ராஜன் கோஷாவின் நெறியாள்கையில் உருவான 'காற்றின் நடனம்' எனும் ஹிந்தித் திரைப்படம் - ஆங்கில உபதலைப்புக்களுடன் விடியோ காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

படம் ஆரம்பமாவதற்கு முன்னர், பண்டிட் மணிலால் நக் என்வரின் சிதார் இசை நிகழ்வும்- விடியோ காட்சியாக இடம்பெறும். படநிகழ்வின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும்.

ஆர்வலர்கள், மேற்படி நிகழ்வுக்கு வருகைதந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்திருக்கின்றார்.

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் - சி.ஜனகன்
முகவரி - கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மூன்றாவது அகவையில்



பெயர் - சி.ஜினுசியா
முகவரி - கரணவாய் மத்தி, கரவெட்டி.

நான்காவது அகவையில்



பெயர் - ஈ.வானதி
முகவரி - இன்பருட்டி, பருத்தித்துறை.

ஐந்தாவது அகவையில்



பெயர் - க.சரிதா
முகவரி - நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.

ஆறாவது அகவையில்



பெயர் - சு.நவனீதன்
முகவரி - மகாதனை, தெல்லிப்பளை.

ஆறாவது அகவையில்



பெயர் - சு.நிலாங்கினி
முகவரி - அனிஞ்சிலடி, கரவெட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை


## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்



## மாணவர் மலர்

(01) கார்த்திகா வரைந்த படத்திலுள்ள சில அம்சங்கள் நந்தினி வரைந்த படத்திற் பிழையாகக் காட்டப்படுள்ளன. அத்தகைய பிழையான, இடங்களுள் 7 ஐ நந்தினி வரைந்த சித்திரத்திற் கண்டுபிடித்து அவற்றைச் சுற்றி வட்டமிடுக.


**கார்த்திகா வரைந்த படம்**




**நந்தினி வரைந்த படம்**




(02) கீழே A பக்கத்தில் தரப்பட்டுள்ள கடிகார முகங்கள் காட்டும் டிஜிட்டல் நேரங் களை எழுதுக. B பக்கத்தில் உள்ள கடிகார முகங்களில் A பக்க கடிகார முகங்கள் காட்டும் நேரங்களில் இருந்து 30 நிமிடங்கள் தாமதமாகக் காட்டுங்கள் டிஜிட்டல் நேரங்களையும் எழுதுங்கள்.




(03) கீழே தரப்பட்டுள்ள A பெட்டியை விரித்தால் எவ்வாறு காணப்படும் என்பதை 1,2 இலங்கங்கள் இடப்பட்டவற்றிலிருந்து தெரிவு செய்க.




(04) கீழே மூன்று குழந்தைகளின் நிறைகளை விற்தராசுகள் காட்டுகின்றன.



**மேரி - 11 மாதங்கள் தீபா - 8 மாதங்கள் ரகு - 10 மாதங்கள்**

1. 10 மாதக் குழந்தையின் பெயர் என்ன? ....................................
2. 8 மாதக் குழந்தையின் பெயர் என்ன? ....................................
3. 11 மாதக் குழந்தையின் பெயர் என்ன? ....................................
4. மூன்று குழந்தைகளுள் மூத்த குழந்தையின் பெயர் என்ன? ....................................
5. தீபாவின் நிறை யாது? (....................Kg)
6. ரகுவின் நிறை யாது? (....................Kg)
7. மேரியின் நிறை யாது? (....................Kg)

(05) தொடர்புபடுத்துக.

| பகுதி I | பகுதி II |
|---|---|
| **தாவரத்தின் பெயர்** | **நோய் அறிகுறி** |
| 1. உருளைக்கிழங்கு | இலைகள் வெளிறல். |
| 2. நெல் இலைகள் | இல்லைகள் சித்திரவடிவமாகக் காணப்படல். |
| 3. சோயா அவரை | கபிலநிறப் புள்ளிகள் காணப்படல். |
| 4. மிளகாய் | தண்டுகள் வாடிக்காணப்படல். |
| 4. சோளம் | இலைகள் சுருண்டு மடிதல். |

(06) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(1) ஈக்களை விரட்ட வியாபாரிகள் கைக்கொள்ளும் முறைகள் மூன்றை எழுதுக.

1. ....................................................................
2. ....................................................................
3. ....................................................................

(2) வியாபார நிலையங்களில் பயன்படுத்தபடும் அளவை நிறுவைகள் மூன்றின் பெயர்களை எழுதுக.

1. ........................ 2. ........................ 3. ........................

(07) "மரங்கள் எமது நண்பர்கள்" என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1. ....................................................................
2. ....................................................................
3. ....................................................................
4. ....................................................................
5. ....................................................................
6. ....................................................................

### பெற்றோர்களின் கவனத்திற்கு...!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. (பாடத்திட்டத்திற்கு உட்பட்டு அமையும்) வினாக்கள் தயாரிக்கும் போது - மாணவர்களின் வயது, அறிவு, திறன், மனப்பாங்கு என்பன கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நிதானமாகச் சிந்தித்து, அறிவுறுத்தல்களை வாசித்து அதற்கமைய மாணவர்கள் செயற்படும்போது, இப்பரீட்சை கடினமானதாக அமையாது.

மாணவர்களை வற்புறுத்தி விருப்பின்றிக் கற்பிக்கின்றபோது - மாணவர்கள் மனநோயாளிகளாக மாறக்கூடிய அபாயமும் இருப்பதாகக் கல்வியாளர்கள் எச்சரிக்கின்றார்கள். பிள்ளைகளுக்கு வயதுக்கு மீறிய வினாக்கள் வழங்குவதையும், அவர்கள் மீது சுமக்க முடியாத கல்விச்சுமைகளை ஏற்றுவதையும் தவிர்க்கவும். இன்றேல்.....!

**வி.என்.எஸ். உதயசந்திரன்**
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

### அடுத்தவாரம் தொடரும்...!

சென்றவார 'மாணவர் மலர்' பகுதியில் வெளியான G.C.E. (O/L) வரலாறும், சமூகக்கல்வியும் பாடத்தில் தேசப்படம் தொடர்பாக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அதன் விளக்கங்களும் என்ற பகுதி - அடுத்தவாரம் தொடரும்...!

# க.பொ.த [சாதாரண] மாணவர்களுக்கான வழிகாட்டற் தொடர் - I

## விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்

தரம் 07 தொடக்கம் தரம் 11 வரை விஞ்ஞானமும் தொழிநுட்பமும் என்ற பாடம் கற்பிக்கப்படுகிறது. இப் பாடத்தில் க.பொ.த (சா/த) பரீட்சையில் மாணவர் சித்தியடையும் வீதம் குறைந்து வருகின்றது எனப் பலரும் கவலைப்படுகின்றனர். இப்பாடத்தில் அநேக மாணவர்கள் கவனமெடுத்துப் படித்து, கவனமாகப் பரீட்சை எழுதினால் சித்தியடைவோர் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காகவே - கல்வித் திணைக்களமும், பாடசாலைகளும், தனியார் கல்விநிலையங்களும் பெருமுயற்சி செய்கின்றன. இவ்வளவுப் பரபரப்பு - கல்விச்சமூகத்தில் இருந்தும், இதில் முக்கிய தரப்பான, மாணவர் சமூகம் பெரிதும் அலட்டிக் கொண்டதாக இல்லை.

புதிய கணிப்பீட்டுத்திட்டம், தரமான நுகர்வுப் பொருள் கொள்வனவு, கற்பித்தல் முறைகளில் ஏற்படுத்தப்பட்டுவரும் மாற்றம் என்பன எமது பாடசாலைச் சமூகத்தின் இன்னொரு பிரிவான பெற்றோருக்குப் பூரணமாகத் தெரிந்திருக்க நியாயமில்லை.

பரீட்சைப் பெறுபேறு - திறமைச் சித்திகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்துவதைவிட - விஞ்ஞானமும் தொழிநுட்பமும் பாடத்தின் குறிக்கோள்களில் மாணவனின் அடைவை அளவிடக்கூடியதாக அமையப்போகின்றது.

மாறிவரும் சமூகத்தேவைகளுக்கான ஒரு மார்க்கமாக விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் பாடம் அமைகின்றது. அப்பாடத்தில் ஒரு மாணவன் - சமூகத்தின் புனரமைப்பிற்கு ஏற்ற ஒருவனாக மாறவிரும்பின், இத்தொடரைத் தொடர்ந்து வாசிக்கட்டும். அவனுக்கு வழிகாட்ட ஒருவர் விரும்பின், அவரும் இதை வாசித்து வழிகாட்டலாம். பரீட்சைப் பெறுபேற்றை உயர்த்தவும், சுயகற்றலில் ஒரு மாணவனை ஈடுபடுத்தவும் இத்தொடரில் முயற்சிக்கலாம் என எண்ணுகின்றேன்.


*வசதி கருதி:* பரீட்சை நோக்கில் பாடப்பரப்புக்களை ஒன்றிணைக்கமுடியும். அவ்வாறு ஒன்றிணைத்து மாணவர்க்கான அவசியக் குறிப்புக்கள் வழங்கப்படவுள்ளன. பின்பு அலகுரீதியான வினாக்கள், மாதிரி வினாப்பத்திரம் என்ப வற்றைச் செய்வதன் மூலம், பரீட்சைக்குக் குறுகிய காலத் திலேயே மாணவர் தயாராகமுடியும்.

கீழே காட்டப்படும் முக்கிய பாடப்பரப்புக்களையும், வினாக்களுக்காகத் தேர்ச்சி பெறவேண்டிய விடயங்களையும் முதலில் ஆராய்வோம்.


1. மின்
2. ஒலியும், ஒளியும்
3. இயக்கம்
4. தாவரத் தொழிற்பாடுகள்
5. அடர்த்தி, அமுக்கம், வேலை, விசைத்திருப்பம்
6. பொறிகள், சக்திப்பாய்ச்சல்
7. சமூக விஞ்ஞானம்
8. இயைபாக்கமும், ஒரு சீர்த்திடநிலையும்
9. கலங்கள், இழையங்கள்
10. மூலகங்கள், பாகுபாடு, இயல்பு, இரசாயன மாற்றம், கணித்தல் வினாக்கள்
11. விஞ்ஞான விளக்க வினா
12. உபகரணப் பயன்பாட்டு வினாக்கள்
13. பிரச்சினைத் தீர்வுகளிற்கு விஞ்ஞானக் கோட்பாடுகள்
14. தகவலை வாசித்து, கிரகித்து விடை தருதல்.

### (1) மின்


மின்னைப் பிறப்பிப்பதற்கு மின்கலங்களும், டைனமோக்களும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுகின்றன.




1. எளிய மின்கலத்தில் நாகம் (-) முனைவு. செம்பு (+) முனைவு.
2. நாகத்திலிருந்து செம்பிற்கு இலத்திரன்கள் செல்கின்றன.
3. நாகத்தில் $Zn - Ze \longrightarrow Zn^{2+}$
   செம்பில் $2H + 2e \longrightarrow H_2 \uparrow$
   எனும் மாற்றம் நிகழ்கின்றது.
4. இங்கு தோன்றும் ஐதரசன் - செம்பில் படிவதால் மினனோட்டம் சிறிது நேரத்தில் நின்றுவிடும்.
5. செம்புக்கோலைத் துடைப்பதால் மீண்டும் மின்னோட்டத்தைப் பெறமுடியும்.
6. இங்கு நேரத்துடன் மின்னோட்டத்தை வரைபு ஆக்கினால்,




   என்ற வரைபு கிடைக்கும். இது நேரோட்ட மின் (**Direct current**) என அழைக்கப்படும். இலத்திரன் ஓட்டத்திற்கு எதிரான திசையே மின்னோட்டத்திசை ஆகும்.
7. நேரோட்ட மின், மின்பகுப்பிற்குப் பாவிக்கப்படும்.





காவலிடப்பட்ட கடத்திச் சுருள் ஒன்றினுள், காந்தமொன்று அசைக்கப்படும்போது தூண்டல் மின்பெறப்படுகின்றது.

அ) காந்தம் ஓய்வில் எனில், கல்வனோமானியின் காட்டி




ஆ) வடமுனைவு நகரும்போது




இ) மீண்டும் ஓய்வு



ஈ) திரும்ப இழுக்கும்போது



★ இங்கு பெறப்படும் ஓட்டம், திசைமாறுகின்ற ஆடல் ஓட்டமாகும் (**Alternative Current**). அதற்குரிய வரைபு,




என்றவாறு இருக்கும்.

★ மைக்கல் பரடே என்பவர் தூண்டல் மின்னோட்டத்தை அறிநதார். 'கடத்தி ஒன்றில் தொடர்புபட்டுக் காணப்படுகின்ற காந்தப் பாயக்கோடுகளின் எண்ணிக்கையில் ஏற்படுத்தப்படும் மாற்றமானது, அங்கு தூண்டப்படும் மின்னோட்டத்திற்கு நேர்விகித சமனாகும்' எனும் விதியைக் கூறியவர் பரடே ஆவார்.

★ பரடே இன் விதியிலிருந்து தூண்டல் மின்னானது,

1. காந்தம் அசைக்கப்படும் வேகம்.
2. காந்தத்தின் வலிமை.
3. வரிச்சுருளின் எண்ணிகை என்பவற்றில் தங்கியுள்ளது என அறியலாம்.

★ பிளமிங்கின் வலக்கை விதியிலிருந்து தூண்டல் மின்னோடத்திசையை அறிந்துகொள்ளலாம். ஒரு மனிதனின் வலது கையின் பெருவிரல், நடுவிரல், சுட்டுவிரல் ஆகிய மூன்றையும் ஒன்றுக்கொன்று செங்குத்தாகப் பிடிக்கும்போது - பெருவிரல் 'காந்த இயக்கத்திசையையும், சுட்டுவிரல் காந்தப் புலத்தின் திசையையும் தருமானால், நடுவிரல் தூண்டல் மின்னோட்டத்திசையைத் தரும்.

★ டைனமோக்களில் தூண்டல் மின் பெறப்படுகின்றது.


★ ஆடல் ஓட்டமானது - நிலைமாற்றி, கொள்ளளவி என்பன பாவிக்கும் சுற்றுக்களிற்கு உகந்தது.

★ மின்னில் பயன்படும் கணியங்கள் வருமாறு

| கணியம் | மின் அழுத்த வேறுபாடு | தடை | மின்னோட்டம் |
|---|---|---|---|
| குறியீடு | V | R | I |
| அலகு | வோல்ட் V | ஓம் Ω | அம்பியர் |
| அளக்கும் - கருவி | வோல்ட்மானி | ஓம்மானி | அம்பியர்மானி |


★ மேற்படி கணியங்களிற்கிடையிலான தொடர்பை ஓமின் விதி விளக்குகின்றது. வெப்பநிலை போன்ற பௌதீக கணியங்கள் மாறாத இடத்தில், கடத்தி ஒன்றின் முனைவுகளிற்கிடையிலான மின்னழுத்த வேறுபாடு, அங்கு ஓடும் மின்னோட்டத்திற்கு நேர்விகித சமனாகும்.

★ இவ்விதியில் இருந்து $V = IR$ எனும் சமன்பாடு கிடைக்கின்றது.





தடை ஒன்றிற்குச் சமாந்தரமாக வோல்ட்மானியைப் பொருத்தி, தொடராக அம்பியர்மானியைப் பொருத்தி மேற்படி சுற்று ஆக்கப்பட்டது. மின்கலங்களின் எண்ணிக்கையை மாற்றி V, I ஆகியவற்றை அளந்து, V இற்கும் I இற்கும் வரைபு வரைந்தால் அது பின்வருமாறு அமையும்-

இதிலிருந்து ஓமின் விதி உண்மை என அறியலாம்.





★




இந்த மின்சுற்றில் நான்கு தடைகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் xy சமாந்தர இணைப்பு, yz தொடரிணைப்பு, xy யில் சமானத்தடை $1/R_1 = 1/r_1 + 1/r_2$ என்பதாலும், yz இல் $R_2 = r_3 + r_4$ என்பதாலும் பெறப்பட்டு, இறுத்தித்தடை $R = R_1 + R_2$ ஆல் பெறப்படும்.

உதாரணம்:




எல்லா வகையிலும் ஒத்த மூன்று மின்குமிழ்கள் படத்தில் காட்டியவாறு இணைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு மின்குமிழின் தடை 2Ω ஆகும்.
மின்கலம் 6V அழுத்த வேறுபாடு உடையது.

1. சமானத்தடை XY இல் $1/R = 1/2 + 1/2$
   $R = 1\Omega$.
   சுற்றின் சமானத்தடை $R = r_1 + r_2$
   $= 1\Omega + 2\Omega$
   $= 3\Omega$.
2. சுற்றில் ஓடும் மின்னோட்டம் $I = V/R\ \Omega$
   $= 6V/3\Omega = 2A$.
3. இச்சுற்றில் குமிழ் C யின் அழுத்த வேறுபாடு -
   $C = IR$
   $= 2A \times 2\Omega$
   $= 4V$.

B யின் அழுத்த வேறுபாடு - சமாந்தர இணைப்பில் உள்ளதால் A,B இரண்டும் ஒரே அழுத்த வேறுபாடு கொண்டவை.

∴ B யின் அழுத்த வேறுபாடு $V_1 = 6V - 4V$
$= 2V$.


**பு.ஸ்ரீஸ்கந்தராஜா**

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

### பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

(18.06.2003 - தொடர்ச்சி..)

(46) வறட்சியினால் பாதிக்கப்பட்ட ஒரு குளத்தில் இரண்டு ஆமைகள் வாழ்ந்து வந்தன. அவற்றுக்கு இரண்டு நாரைகள் உதவிசெய்ய விரும்பின. ஒருநாள் இரண்டு நாரைகளும் இக்குளத்திற்கு வந்து, ஒரு புதிய குளத்திற்கு அவற்றை எடுத்துச் செல்வதற்குத் தம்முடன் வருமாறு ஆமைகளுக்கு அழைப்பு விடுத்தன. ஆமைகள் இணங்கியதுடன், ஓர் ஆமையை முதலில் எடுத்துச் செல்வதற்கு நாரைகள் ஆரம்பமாகின. அவையொரு கிராமத்தின் மேலாகப் பறந்து செல்லும்போது, சிறு பிள்ளைகள் குழுவொன்று அவற்றைப் பார்த்துச் சத்தமிடத் தொடங்கியது. பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவதற்கு ஆமை வாயைத் திறந்தது. இது, ஆமைக்குப் பாரதூரமான விளைவினை ஏற்படுத்தியது. கவலையடைந்த இரண்டு நாரைகளும் அடுத்து இரண்டாவது ஆமையைப் புதிய குளத்திற்குக் கொண்டு செல்லத் தொடங்கின. அவை அக்கிராமத்தின் மேலாகப் பறந்து செல்லும்போது, நாரைகளில் ஒன்று எவருக்கும் வாயைத் திறக்க வேண்டாமென ஆமைக்கு அறிவுரை கூறுவதற்கு விரும்பியது. உடனே நாரை தனது வாயைத் திறந்தது. தடி வழுக்கிச் சென்றது. இரண்டாவது ஆமையும், முதலாவது ஆமையின் கதியை அடைந்தது. இக்கதையின் பல சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ள படங்களில் ஒழுங்கு முறையின்றித் தரப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பங்களை வரிசைக்கிரமப்படித் திருத்தமாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.




1) HCAEFDBG 2) HCEGFBAD
3) HCBGEFAD 4) HCABGEDF
5) HCDEABGF.

47 தொடக்கம் 50 வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டனவாகும்.
ஒரு பரீட்சைக்கு விடையளிக்கும் மாணவர்களுள் கருணன் - கண்ணனைவிட அதிகமாக எழுதி, கமலனுக்குப் பின் பரீட்சை நிலையத்தைவிட்டு வெளியேறுகிறான். வண்ணன் - கருணனைவிட அதிகமாகவும், கமலனைவிடக் குறைவாகவும் எழுதி, கருணனுக்குப் பின்பாகவும் மன்னனுக்கு முன்பாகவும் வெளியேறினான். வருணன் - முருகனைவிடக் குறைவாக ஆனால், கமலனைவிட அதிகமாக எழுதி, மன்னனுக்குப் பின்பாக வெளியேறுகிறான். கண்ணன் - வானவனைவிட அதிகமாக எழுதி, கமலனுக்கு முன்பாக வெளியேறுகிறான்.

(47) பரீட்சை நிலையத்தைவிட்டு முதலில் வெளியேறியவர் யார்?

1. கமலன் 2. கண்ணன் 3. கருணன்
4. வண்ணன் 5. மன்னன்.

(48) மிகக் குறைவாக எழுதியவர் யார்?

1. முருகன் 2. வருணன் 3. கண்ணன்
4. வானவன் 5. கமலன்

(49) மேற்தரப்பட்ட எட்டுப் பரீட்சார்த்திகளுள், ஏழு பேரின் விடைத்தாள்கள் அவற்றின் அளவீட்டில் ஒப்பிடலாம். ஒப்பிடமுடியாத பரீட்சார்த்தி யார்?

1. மன்னன் 2. வருணன் 3. கண்ணன்
4. வானவன் 5. கமலன்.

(50) மிக அதிகமாக எழுதியவர் யார்?

1. வருணன் 2. முருகன் 3. கமலன்
4. வன்ணன் 5. வானவன்.

(தொடரும்...)

**P.உமாசங்கர்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

திருக்குறள்.

## நமது நோக்கு

# சுயலாபக் குழப்பங்கள்!

இடைக்கால நிர்வாகசபை பற்றிய முன்வரைபு எதுவுமே விடுதலைப்புலிகளிடம் முன்வைக்கப்படாதநிலையில் - பிறக்காத குழந்தைக்கு அவசரப்பட்டுப் பெயர் வைப்பதான முயற்சிகளில் ஈடுபடுவதான குடுக்கைத்தனங்களில் பல தரப்புக்களும் ஈடுபட்டுவருகின்றன.

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்கக்கூடிய அரசியல், நிர்வாக அதிகாரம் கொண்டதொரு நிர்வாக அமைப்பையே விடுதலைப்புலிகள் எதிர்பார்த்துள்ள நிலையில் -

அதற்கான உறுதியான வரைபு ஒன்றைத் தருவதற்கே, உலகையே தலைகீழாக்கும் யோசனையுடனும், தலையாய தாமதத்துடன் அரசாங்கம் ஆமை வேகத்தில் நகரும் சூழலில் -

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டுவிட்டதாகவும், அந்த நிர்வாகம் நடைமுறைக்கு வருவதாகவும் கருதிக்கொண்டு, முந்திரிக்கொட்டைத்தனமான அறிவிப்புக்களை வெளியிடும் இத்தரப்புக்களை எண்ணி - அழுவதா, சிரிப்பதா என்று தெரியாத நிலையிலேயே மக்கள் உள்ளனர்.

இடைக்கால நிர்வாகம் ஒன்றிற்கான தேவையை நாடி நிற்கும் மக்கள் - அந்த நிர்வாகத்தின் மூலம் தமது சுமுகவாழ்வுக்கான அடிப்படைகளைப் பெறக்கூட முடியாதவர்களாக நிற்கின்றபோது -

இந்தப் பாரிய மனிதாபிமானப் பிரச்சினையின் ஆழத்தை உணர்ந்துகொள்ளாமல் - குறுகிய அரசியல் நோக்கங்களோடும், சச்சரவுகளைத் தோற்றுவிக்கும் திட்டமிட்ட செயற்பாடுகளோடும் - குழப்பவாதக் கோஷ்டிகள் களமிறங்கியுள்ளன.

ஆயிரக்கணக்கான போராளிகளது அளப்பெரும் தியாகத்துடனும், வார்த்தைகளால் சொல்லிவிடமுடியாத மக்களது அர்ப்பணிப்புடனும் உருவாக்கப்பட்டிருக்கின்ற தேசிய விடுதலைப்போராட்டம் - ஏதோ, இந்த இடைக்கால நிர்வாகத்துக்காகத்தான் காத்துக்கிடந்தது போலவும்-

இந்த இடைக்கால நிர்வாகமே, தமிழ் மக்களின் அபிலாஷைகளை மேலதிகமாகத் தீர்த்துவிட்டது போலவும்- பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் மட்டுமன்றி, சகோதர முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் சிலரும் கூச்சலிடுவதை இன்று நோக்கக்கூடியதாக இருக்கிறது.

தமிழினம் முன்னெடுத்த தேசிய விடுதலைப் போராட்டத்தின் இலக்குகள் - முஸ்லிம் மக்களதும் அபிலாஷைகளை பூர்த்திசெய்யும் என்ற உறுதிப்பாடு, விடுதலைப்புலிகளால் பலமுறையும் எடுத்துச்சொல்லப்பட்டதன் பின்னரும்-

வட - கிழக்கில் ஏற்படுத்தப்படவுள்ள நிர்வாகக் கட்டமைப்புக்களில் - முஸ்லிம் மக்கள், தமக்குரிய அங்கத்துவத்தைப் பெறுவார்கள் என்பதை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்திய பின்பும் -

முஸ்லிம் கட்சிகளின் சில பிரதிநிதிகள் வெளியிடும் அறிக்கைகளும், அறிவிப்புக்களும்- தேவையற்ற பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் உருவாக்கும் நச்சுத்தன்மை கொண்டவையாகவே வெளிவருகின்றன.

இப்போது நடக்கின்ற சமாதான முயற்சிகள் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலானதே என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் -

அடாத்தாக மூக்கை நுழைத்து, குழப்பியடிக்க முயலும் அயல்நாடு போன்றும், இடைக்கால நிர்வாகத்துக்கான நகர்வுகள் தொடங்கமுன்பே - தனிநாட்டைத் தமிழர் பெற்றுவிட்டதாகப் பிரசாரம் செய்யும் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் போன்றும்-

இந்தச் சில முஸ்லிம் கட்சிப் பிரதிநிதிகளும் அறிவிப்புகளை விடுவதும், எச்சரிக்கும் தொனியிலாகப் பேசுவதும் - ஆக்கபூர்வமான விளைவுகளுக்கு வழிவகுக்கப் போவதில்லை.

கல்முனையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசியிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர்களான அன்வர் இஸ்மாயிலும், ஹரீஸும் - இடைக்கால நிர்வாக அமைப்பில் முஸ்லிம்களுக்கு ஐம்பதுக்கு ஐம்பது வேண்டும் எனவும்,

முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களை - ஆளும் அதிகாரம் முஸ்லிம்களுக்கே வேண்டுமென்றும்,

இன்னும் ஒருபடி மேலே சென்று - முஸ்லிம்களுக்குத் தனியாக இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படவேண்டும் எனக் கூறியிருப்பதும்-

சிறுபிள்ளைத்தனமானது மட்டுமல்ல, முஸ்லிம் மக்களிடையே இனவிரோதக் கருத்துகளைத் தூண்டிவிட்டு- அதில் குளிர்காய்வதற்கு மேற்கொள்ளும் முயற்சியே ஆகும்.

முஸ்லிம் மக்களுக்குரிய பங்கேற்பை விடுதலைப் புலிகள் உறுதிப்படுத்திய பின்னரும், அதில் நம்பிக்கை கொள்ளாது - இடைக்கால நிர்வாகம் பற்றி இப்போதே சர்ச்சைகளைக் கிளப்புவதும் தேவையற்ற முற்கற்பிதங்களைப் பிரசாரப்படுத்துவதும் - அப்பட்டமான சுயலாப நோக்கிலானதே என்பதை முஸ்லிம் மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

# ஜனாதிபதி நிதியத்தின் உதவி; யாழ். பல்கலை புறக்கணிப்பு!

## ஆகக்குறைந்த நிதியே அதற்கு ஒதுக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி நிதியத்திலிருந்து, நாட்டிலுள்ள சகல பல்கலைக் கழகங்களுக்கும் என ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் - மற்றைய பல்கலைக்கழகங்களைவிட, ஆகக்குறைந்தளவு நிதியே யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்குமென ஒதுக்கப்பட்டுள்ள நிதியில்- யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்படும் நிதி, வருடாவருடம் படிப்படியாக வீழ்சியடைந்து வருவதாக - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடபபட்டுள்ள புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து - பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுகளும், வேறு உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி நிதியம், நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களினூடாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிவருவதாகக் கூறப்படுகின்றபோதும் - மிகவும் குறைந்தளவான நிதியினையே யாழ்.பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்குவதன் மூலம், அது - திட்டமிடப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவே தகவலறிந்தோர் கூறுகின்றனர்.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து சகல பல்கலைக்கழகங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கீடுகளின் விபரம் ஒரேபார்வையில்.

ஒதுக்கப்பட்ட நிதி (மில்லியன் ரூபாவில்)

| பல்கலைக்கழகங்கள் | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|
| பேராதனை | 1,108.0 | 936.0 | 495.2 |
| கொழும்பு | 594.6 | 546.6 | 238.6 |
| றுகுணு | 529.0 | 492.9 | 238.1 |
| ஜயவர்த்தனபுர | 580.9 | 390.5 | 421.0 |
| களனி | 417.5 | 492.9 | 238.1 |
| மொறட்டுவ | 336.1 | 391.8 | 344.2 |
| சப்ரகமுவ | 158.9 | 118.4 | 144.1 |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | 189.3 | 175.7 | 85.2 |
| ரஜரட்ட | 135.2 | 180.5 | 139.1 |
| வயம்ப | 148.9 | 136.9 | 55.8 |
| பௌத்த, பாளி | 23.5 | 29.1 | 14.8 |
| யாழ்ப்பாணம் | 0.4 | 0.3 | 0.3 |

# தமிழ்ச்செல்வனுக்கு விசா மறுத்த பிரிட்டன்; இந்தியப் பத்திரிகையின் கட்டுக்கதை அது!

## தூதரக வட்டாரங்களிலிருந்து தகவல்

இந்தியப் பத்திரிகை ஒன்றில், அதன் கொழும்பு முகவர் அனுப்பிவைத்த முக்கிய செய்தியொன்று உண்மைக்குப் புறம்பானது என - கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட இந்தியப் பத்திரிகை, விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் லண்டன் செல்வதற்கு விசாவிற்கு விண்ணப்பம் செய்ததாகவும், அதனை பிரிட்டிஷ் தூதுவராலயம் நிராகரித்து விட்டதாகவும் செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால், விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எவரும் விசாவுக்கு விண்ணப்பம் செய்யவில்லை என்றும், அப்படி விண்ணப்பம் செய்யும் பட்சத்தில், அதனை பிரிட்டிஷ் அரசு நிராகரிக்குமா இல்லையா ,என்பதை முன்கூட்டிச் சொல்ல முடியாது எனவும் பிரிட்டிஷ் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு விண்ணபத்தையும் தனித்தனியாகப் பரிசீலிப்பது, பிரிட்டிஷ் அரசின் கொள்கை என அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்புத் தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் இதுபற்றிக் கூறும்போது - இந்திய செய்தி முகவர்கள் சிலர் இப்படியான கட்டுக்கதைகளை தங்கள் செய்தியேடுகளில் பிரசுரித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அழுத்தம் கொடுக்க எத்தனிப்பது ஒன்றும் வழக்கத்துக்கு மாறானது அல்ல, எனக் குறிப்பிட்டார்.

அந்த அரசியல் பிரமுகர் மேலும் கூறும்போது, முடங்கிப் போன அமைதிப் பேச்சுவார்த்தை பற்றி, தற்போது லண்டனில் வதியும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தோடு கலந்துரையாடுவதற்கு, சு.ப.தமிழ்ச்செல்வன் லண்டன் செல்ல இருக்கிறார் என நம்பப்படுகிறது. அன்ரன் பாலசிங்கம் உடல் நலமின்மை காரணமாக நீண்ட தூர விமானப் பயணம் செய்யக்கூடாதென, அவரது மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

பிரிட்டிஷ் அரசிற்கு விடுதலைப் புலிகளோடு அதிகாரபூர்வமான நேரடித் தொடர்பு கிடையாது. ஆனால், பிரிட்டிஷ் தூதுவர் கடந்த சில வாரங்களில் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் அமைப்பின் பொறுப்பாளர்களை சந்தித்து- அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்பான இன்றைய நிலைமையைப் பற்றி கலந்துரையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவசியம் ஏற்பட்டால் சு.ப.தமிழ்ச்செல்வன் ஐக்கிய இராச்சியத்துக்குப் பயணம் மேற்கொள்ளக்கூடும். அது தொடர்பாக விசா பெறுவதில் அவருக்கு எந்தச் சிக்கலும் இருப்பதாக எண்ண இடமில்லை. அண்மைக் காலத்தில் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கு அவர் பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்திய அதிகாரிகள் போலல்லாது, ஐக்கிய இராச்சிய அதிகாரிகள் அமைதிக்கான தூதுவர்களை ஆதரிப்பதை, தங்கள் கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் விட, இப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், லண்டனிலிருந்தே சென்று பேச்சுக்களில் கலந்துகொண்டு திரும்புகிறார் என்பதை இந்திய ஊடகங்கள் மறந்து போயிருப்பது ஆச்சரியம் தருகிறது என பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அரசியல் பிரமுகர் மேலும் தெரிவித்தார்.

# ஆடம்பரக் கார்களின் சட்டவிரோத இறக்குமதி!



வெளிநாட்டில் இருந்து - போலியான ஆவணங்களைச் சமர்பித்தும், வாகனத்தின் செஸி இலக்கங்களை மாற்றியும் - இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த மூன்று ஆடம்பரக் கார்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த ஆடம்பரக்கார் இறக்குமதியில், கார்களுக்கான பெறுமதியைக் குறைத்துக் காட்டுவதன் மூலம் - செலுத்தப்படும் வரியைக் குறைப்பதற்காக, இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

ஹோமகவைச் சேர்ந்த ஒரு இளைஞன், ஜப்பானில் வசிக்கின்ற பாகிஸ்தானிய வர்த்தகரிடம் இருந்து, இந்தக் கார்களை கொள்வனவு செய்திருந்தார்.

வாகனங்கள் பற்றிய போலியான ஆவணங்களாலும், இவற்றின் செஸி எண் மாற்றப்பட்டுள்ளதாலும், இவற்றின் பெறுமதி ஒரு இலட்சத்திற்கும் இரண்டு லட்சத்து எழுபதாயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட பணத்தால் குறைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஆனால், உள்ளூர் சந்தையில் ஹொண்டா மற்றும் நிஷான் ரகங்களைச் சேர்ந்த இந்த வாகனங்களின் உண்மையான பெறுமதி, பல மில்லியன் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை தமிழ் மகாவித்தியாலய காணி சிங்கள இளைஞர்களிடம்!

## தடுக்குமாறு, சந்திரநேரு எம்.பி கல்வியமைச்சுக்குக் கடிதம்

அம்பாறை தமிழ் மகாவித்தியாலயக் காணியை, சிங்கள இளைஞர்களுக்கு ஒப்படைப்பதற்காகச் சுவீகரிக்கும் நடவடிக்கையை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு- கோரும் அவசர வேண்டுகோளை- அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

சந்திரநேரு எம்.பி.யின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அம்பாறை வலயத்தில் உள்ள ஒரே ஒரு தமிழ் பாடசாலை அம்பாறை தமிழ் மகாவித்தியாலயமாகும். பழம்பெரும் இப் பாடசாலைக்குச் சொந்தமான கட்டடங்களையும், காணிகளையும் சிங்களக் கலைஞர் குழுவொன்றுக்கு கையளிக்குமாறு, அதிபருக்கு உத்தரவு கிடைத்துள்ளதாக அறிந்தேன்.

பல தசாப்தகாலம் பழைமைவாய்ந்த இப்பாடசாலையை, மூடுவதற்கு எடுக்கப்படும் ஒரு சதி நடவடிக்கையாகவே இதனைக் கருதுகின்றேன். அம்பாறை தமிழ் மகாவித்தியாலயம் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி நிருவாகத்தின் கீழ்வரும் பாடசாலையாகும். எனவே, உடனடியாக மேற்கூறப்பட்ட சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலட்சியப் பயணத்தை முன்னெடுக்க உந்துசக்தியாகத் தமிழ் ஊடகங்கள்!

**விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர்கள் - கடந்த சனிக்கிழமை மாலை, கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, சு.ப.தமிழ்ச்செல்வன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.**

**(தொகுப்பு- இரா.துரைரத்தினம்)**

*நேற்றைய தொடர்ச்சி...*

வல்லாதிக்க சக்திகளுக்கு அடிபணியாது, எங்களுடைய மக்களின் உரிமைகளுக்காக நாம் போராடி வந்திருக்கிறோம்.

இதற்காக - எந்த சக்தியுடனும் நாம் முகம் கொடுத்திருக்கிறோம், முகங்கொடுக்கவும் தயாராக இருக்கிறோம். நாங்கள் எவருக்கும் அச்சுறுத்தலானவர்கள் அல்ல. பிழையாக உருவகப்படுத்தப்படலாம். ஒவ்வொரு சக்தியின் தேவைகளேற்ப பிழையான செய்திகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

ஆனால், எங்களைப் பொறுத்தவரை - குறிக்கோள், இலட்சியம் எல்லாமே எங்கள் மக்கள் - தங்கள் சொந்த மண்ணில், சுதந்திரத்துடனும், கௌரவத்துடனும் வாழவேண்டும் என்பதுதான். இதற்காக, எங்கள் தலைமை பல நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது. குறிப்பாக - எங்கள் தலைவர் சந்தித்த நெருக்கடி என்பது விபரிக்கமுடியாதது.

தமிழ்மக்களின் சுதந்திரம், உரிமைகளை அங்கீகரித்தல் - அதனால், தங்களுக்கு அச்சுறுத்



தல் எனக் கருதப்படுகின்ற சக்திகள் எல்லாமே, தமிழ்மக்களைப் பிளவுபடுத்தி வருகின்றன. தமிழ்மக்கள் ஒன்றுபட்டு, ஒரே குறிக்கோளுடன் கோரிக்கைகளை முன்வைக்கக்கூடிய சூழலைக் குழப்பி, குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.

ஆனால், இன்று அனைத்து மக்களும், அரசியல் விழிப்புணர்வை அடைந்திருக்கின்றனர் என்பது, தெளிவான விடயம். கடந்தகால போராட்டத்தின் மூலம் அரசியல் தெளிவை மக்கள் பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், இந்த நிலைமை மாறியிருக்கிறது. விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ், அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கும் காலம் கனிந்து வந்திருக்கிறது. சிலர் விதிவிலக்காக இருக்கலாம். உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது சகஜம். எங்கள் போராளிகள் - கழுத்தில் சயனைட்டைக் கட்டிக்கொண்டு, எந்த நேரமும் தங்கள் உயிரைக் கொடுத்து, தங்கள் தேசத்தின் விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணிக்கத் தயாரானவர்கள். எதையும் எதிர்கொள்ளக் கூடிய நிலைமையும், அர்ப்பணிப்பும் இன்று உருவாகியிருக்கிறது. ஒரு இளந்தலைமுறை, முழு அளவில் தயாராகி இருக்கிறது. இதை எதிர்கொள்ளும் சக்தி நிச்சயமாக ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கோ, அல்லது வல்லாதிக்கங்களுக்கோ இல்லை.

1948 ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ச்சியாக எங்கள் இனம் போராடிக்கொண்டுதான் வருகிறது. அது பல்வேறு வடிவங்களாக மாறி மாறி வந்திருக்கிறது. இறுதி வடிவம் என்ற ஆயுதப்போராட்டம்தான் - இன்று எங்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் இனம் அகிம்சைவழியில் காலத்திற்குக்காலம் போராடி, வன்முறைரீதியாக அடக்கப்பட்ட வேளையில்தான், ஆயுதப்போராட்டம் உருவானது. அது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம். தமிழ்மக்களுக்கு அது இறுதி வடிவமாகவும் அமைந்துவிட்டது.

வன்முறையை - வன்முறையாலேயே எதிர்கொண்டு, எங்களைத் தற்காத்துக்கொள்கின்ற போராட்டமாகவே இது மாறியிருக்கிறது. உங்களிடம் நாங்கள் கேட்டுக்கொள்வது இதுதான் - விடுதலைப் புலிகளைப் புகழ்பாடவேண்டும் என்று நான் கூறவரவில்லை. தமிழ் ஊடகவியலாளர்கள்; எப்பொழுதும் எங்கள் இனத்தினுடைய இலட்சியத்தை முன்னெடுப்பதற்கு உந்துசக்தியாக இருக்கவேண்டும். வரலாற்றுக் கடமையும் அதுதான்.

எங்கள் இனத்தின் எதிர்காலத்திற்கு எது சரியோ, அதை எழுதுங்கள். இன்று சமாதானச் சூழல் என்று சொல்லப்படலாம். ஆனால், இந்தச் சமாதானச் சூழலில், தமிழ் இனத்திற்குப் பல நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை எதிர்கொண்டு, எமது இனத்தைக் காத்துக்கொள்ளவேண்டிய தேவை - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் இனத்திற்கும் இருக்கிறது. அந்த வரலாற்றுக் கடமையை நீங்கள் செய்யவேண்டும்.

எங்கள் மக்களின் நலன்களுக்கு எதிராக, எதையும் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை. விட்டுக்கொடுப்பு என்பது - எங்கள் இனத்தின் அழிவை நோக்கிச் செல்வதாக இருந்தால், அதைப்பற்றிச் சிந்திக்கமுடியாது. எங்கள் இனத்தின் பாதுகாப்பு, அடையாளம், உறுதிப்பாடு என்பதில நாங்கள் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறோம்.

சிலவேளை, சிலரால் விமர்சிக்கப்படுவதுண்டு. இது சரியான இராஜதந்திர நகர்வு அல்ல, அறிவுபூர்வமான செயல் அல்ல என்று சிலரால் விமர்சிக்கப்படுவது உண்மைதான். அவற்றை நாங்கள் கடந்த காலங்களில் சந்தித்திருக்கிறோம். பிறகு, அவற்றை மாற்றிப் புகழப்பட்டதும் உண்டு.

கடந்தகால விடுதலைப் போராட்ட வரலாற்றை எடுத்துக்கொண்டால் - விடுதலைப் புலிகளின் தவறான அணுகுமுறை என்று விமர்சித்தவர்கள் - பின்னர் மாறி, தலைவரும் விடுதலைப் புலிகளும் எடுத்த தீர்மானம்தான், எங்கள் இனத்தைக் காத்து நிற்கிறது என்று குறிப்பிட்டதையும் வரலாற்றில் காண்கிறோம்.

எங்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து, எங்கள் இனத்தை விலைபேசமுடியாது. அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இன்றைய சூழலும் அதுதான்.

இன்று அரசு ஆரம்பத்தில் எடுத்த நிலைப்பாடுகளை வைத்துக்கொண்டு, சமாதான முன்னெடுப்புக்களுக்குத் தயாராகப் போனோம். நாங்கள் வன்முறையை விரும்பிய சக்தி அல்ல. எங்கள் அரசியல் இலட்சியத்தை அடைவதற்காக நாங்கள் ஆயுதங்களை ஏந்தினோம். இதைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையில் என்றும் இல்லாத மாற்றம் கடந்தகாலங்களில் ஏற்பட்டது. 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களின் மனங்களில் ஏற்பட்ட மாற்றம் என்பது அண்மைக் காலத்தில்தான். அதற்குக் காரணம் என்னவென்றால், தமிழ்மக்களும் எதிர்த்து நின்று தங்கள் உரிமைகளுக்காக எதையும் அர்ப்பணிக்கத் தயார் என்ற செய்தியை, தென்னிலங்கை மக்களுக்குத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

1956, 1977, 1983 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறோம், அழிக்கப்பட்டிருக்கிறோம், சூறையாடப்பட்டிருக்கிறோம். சந்தித்த அவமானங்களும், அவலங்களும் என்பது சொல்லமுடியாதது. அப்போதெல்லாம் தமிழ் இனம்தான் அழிவுகளைச் சந்தித்தது. ஆனால், ஆயுதப்போராட்டம் என்று வந்தபோது, தென்னிலங்கையில் அந்த சூழல் மாறிவிட்டது. இன்று நாம் ஒரு நிமிர்வைப் பெற்றிருக்கிறோம். உண்மையில் இந்தநிலையை ஏற்படுத்துவதற்குத் தலைவரின் உறுதிப்பாடும், வழிநடத்தலும்தான் காரணம்.

நாங்கள் அழிவுகளைச் சந்தித்தோம். எங்கள் உடலங்களை நாங்கள் எண்ணினோம். காலப்போக்கில் இதன் எதிர்விளைவு - சிங்கள தேசத்தைத் தொட்டவுடன்தான், அவர்களும் சமாதானத்தின் தேவையை உணர்ந்தார்கள்.

ஒரு இனத்தை அடக்கி அடக்கி அழிவுக்குட்படுத்தும்போது, அந்த இனம் படுகின்ற துன்பங்கள், துயரங்களை அடக்குமுறையாளர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள். அடக்குமுறையாளர்களும் எதிர்விளைவுகளைச் சந்திக்கின்றபோது, அவர்களின் மனங்களிலும் மாறறம் வருகிறது. இதனால், சிங்கள சாதாரண மக்கள் மத்தியிலும், புத்திஜீவிகள் மனங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டது. அவர்களுக்கு நாங்கள் உண்மையைத்தான் கூறுகிறோம்.

சிங்கள மக்கள் இன்னமும் எங்களுக்கு நெருக்கமான சகோதரர்கள்தான். எங்கள் தேசததிற்கு அயலிலுள்ள இனத்துடன் உறவை வளர்த்துக் கொள்வதில் நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம். எங்களிடம் இனவாத சிந்தனைகள் இல்லை. ஆனால், எங்கள் உரிமைகள் மீது கைவைக்கப்பட்டு, நாங்கள் நசுக்கப்படுகின்றபோது, தவிர்க்கமுடியாமல் அதை எதிர்க்க வேண்டியநிலையில் இருக்கிறோம். அதை நாங்கள் - சிங்கள மக்களுக்குக் கூறிவருகிறோம்.

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து நிற்கின்ற அந்நிய இராணுவத்தினரின் குடும்பங்களே, அவர்களை ஏ-9 வீதியால் பார்க்கபோகின்றபோது, யதார்த்தத்தை உணர்ந்து செல்கிறார்கள். தமிழமக்களுக்கு எவ்வளவு கொடுமைகள் நடைபெறறிருக்கிறது என்பதற்கு இந்த அழிவுகளே சாட்சி. அவர்களுடன், எங்கள் உறவுகளாகத்தான் பழகுகிறோம். அவர்களுக்கு நாங்கள் விளங்கப்படுத்துகிறோம். நீங்கள் எப்படி மாத்தறையிலும், கண்டியிலுமுள்ள உங்கள் வீடுகளிலிருந்து உங்களைத் துரத்திவிட்டு, புலிப்படையினர் அதனை ஆக்கிரமித்திருந்தால், உங்கள் மனநிலை எப்படி இருக்கும் என, நாங்கள் - சிங்கள மக்களிடம் தெளிவுபடுத்தி வருகிறோம்.

நீங்கள் அகதிமுகாம்களிலிருந்து அல்லல்பட்டால், உங்கள் உணர்வுகள் எப்படியிருக்கும்? அப்படி எங்களையும் பாருங்கள். நாங்களும் வடக்கு-கிழக்கில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பூர்வீகமாக வாழ்ந்தோம். இன்று எங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு, வீடுவாசல்கள், நிலங்களை - இராணுவம் ஆக்கிரமிப்புக்குள்ளாகி, சொத்துகள் அழிக்கபபட்டு, உயிரழிவுகளை ஏற்படுத்துகின்றபோது - நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. போராடத்தான் வேண்டும்.

இதைச் சிங்கள மக்களுக்கு- தமிழ் ஊடகவியலாளர்கள் முடிந்தளவு கூறவேண்டும். உண்மையில் ஊடகவியலாளர்கள் - அரசியல் கணிப்பீடு செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள்.



ரணில் விக்கிரமசிங்க - சமாதானத்திற்கு வந்ததற்கான காரணத்தை அவரே கூறியிருக்கிறார். ஒன்று - இராணுவரீதியாகத் தீர்வைக் கொண்டுவரமுடியாது. இரண்டு - பொருளாதார ரீதியான நெருக்கடிநிலைமை. மூன்று - சர்வதேச அழுத்தம். இவையே சமாதானத்திற்கு வருவதற்கான காரணம் என, அவர் கூறியிருக்கிறார். இது வருவதற்கான காரணம் என்னவென்றால், எங்கள் விடுதலைப்போராட்டம் உறுதியோடு நின்றபடியால்தான் ஏற்பட்டது.

புலிகளை அழிப்பதற்குக் காலக்கெடுகூட, சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் இருந்தது. யாழ்ப்பாணத்திற்குத் தரைவழியாகச் சென்று, கைகுலுக்கும் கனவும் அவர்களுக்கு இருந்தது. ஆக்கிரமிப்பின் உச்சவடிவம் அது. அந்தக் கொடுமையும், கொடூரமும், மக்கள் பட்ட அவலங்களும் சாதாரணமல்ல. இன்று கிளிநொச்சியைப் பார்க்கும்போது, அந்த நினைவுதான் வரும்.

கிளிநொச்சியில் ஒரு குடும்பமும் மிஞ்சாமல், இடம்பெயர்ந்து கொக்காவிலிலும், ஸ்கந்தபுரத்திலும் - மரநிழல்களுக்கு கீழ் உணவு, மருந்து வசதியின்றி வாழ்ந்து, தாக்குப்பிடித்திருக்கிறார்கள். வன்னியில் எங்கள் மக்கள் பாவிப்பதற்கு, ஒரு குளக்கட்டுத்தான் பாதையாக இருந்தது, அப்படி எமது தேசம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு முகங்கொடுததது. ஆனால், தலைவரின் உறுதியும், மக்களின் உறுதியும் இந்த நிலையைத் தலைகீழாக மாறறியது. நாங்கள் உறுதியோடு போராடியதன் வெளிப்பாடாகத்தான், சிங்களதேசம் இந்த சமாதானத்திற்கு வரவேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டது.

ஒன்றரை வருடம் யுத்தம் இல்லாதது - சிங்கள தேசத்திற்குப் பெரும் நன்மைகளை ஏற்படுத்தியிருக்கிறது. மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து சிங்களதேசம் இப்போது ஓரளவு மீண்டுவருகிறது. இலங்கையின் - பொருளாதாரம் நெருக்கடியை எதிர்நோக்கி, முதலீட்டாளர்கள் வெளியேறும்நிலை ஏற்பட்டு, அரசாங்கத்தைக் கொண்டுநடத்த முடியாத சூழல் ஏற்பட்டது.

யுத்தநிறுத்தம் காரணமாக இன்று ஓரளவு இதிலிருந்து மீண்டு வருகிறார்கள். ஆனால் - நாங்கள் விழிப்பாக இருக்கிறோம் - சந்திரிகாவின் காலத்திலும்சரி, அதற்கு முன்னரும் சரி, தங்கள் தேவைக்கு எங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை, மறுக்கமுடியாது. தங்கள் தேவை முடிந்தபின், எங்கள் காலை வாரியதைத்தான் வரலாற்றில் காண்கிறோம். இனி அப்படி ஏற்படமுடியாது.

நாங்கள் கொடுத்த விலை அதிகம் . இந்த விலைக்கு ஒரு விளைவை நாங்கள் தேடிக் கொள்வது முக்கியம். தலைவர் அடிக்கடி சொல்லுவார் - "எங்கள் தேசவிடுதலைக்காக உயிரை அர்ப்பணித்தவர்களின் இலட்சியத்தை நாம் சிந்திக்கவேண்டும். அதை மறந்துவிட முடியாது. எங்கள் தேசம் மகிழ்ச்சியாகவும், உரிமைகளோடும் வாழவேண்டும் என்பதற்காகத்தான், இத்தனை ஆயிரம் பேர் உயிர்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நாங்கள் என்றும் மறக்கமுடியாது, புறந்தள்ள முடியாது." இந்தநிலையில், உங்களிடம் நாங்கள் கேட்பது இதைத்தான் - எங்கள் மக்கள் தேசிய உணர்வை உள்வாங்கி, உறுதிப்பாட்டுடன், தலைமைத்துவத்துடன், எல்லாமக்களும் ஒன்றுபட்டு, செயற்படக்கூடிய கருத்துருவாக்கத்தையும், சூழ்நிலையையும் எப்போதும் தக்கவைத்துக்கொள்வது எல்லோருக்கும் நன்மையாக இருக்கும். இந்தப் பணியை எப்போதும் செய்வீர்கள் என்று நம்புகிறோம்.

விமர்சனங்கள் எழுந்தபோதெல்லாம், நாங்கள் அதைக்கண்டு ஒதுங்கிக்கொண்டு போகவில்லை. அவற்றுக்கும் முகங்கொடுத்தோம். அன்று ஊடகங்களுடன் தொடர்புகொள்ள முடியாதநிலை இருந்தபோது, அரசு தனது முழுப் பலத்தையும் பாவித்து - ஒலி, ஒளி ஊடகங்களை தன்வசம் வைத்துக்கொண்டு, பெரும் பிரசாரத்தைச் செய்தது. கொச்சைப்படுத்தும் வகையிலும், மக்களைக் குழப்பும் வகையிலும் ஊடகங்களை - அரசாங்கம் அன்று பாவித்தது.

ஆனால், மக்கள் தெளிவாக இருந்தார்கள். இறுதியாக நடந்த தேர்தல்காலத்தில், அரசாங்கத்தின் ஊடகங்கள் முழு அளவில் எதிர்ப்பிரசாரத்தை மேற்கொண்டிருந்தன. அதை மறக்கமுடியாது. போராட்டத்திற்கு எதிரானவர்கள் - முழுப்பிரசாரத்தையும் செய்தார்கள். அந்த நேரத்தில், எங்களிடம் ஊடகவசதிகள் இருக்கவில்லை. எங்கள் வானொலிகூட, குறிப்பிட்ட தூரத்திற்குத்தான் கேட்கும். தமிழ் ஊடகங்களைப் பொறுத்தவரை, எங்கள் கருத்து நிலைப்பாடுகளை உங்களுடன் நேரடியாகப் பகிர்ந்து கொள்ளாதநிலையிலும், நீங்கள்- இனத்தின் எதிர்காலம் என்றரீதியில் கருத்துக்களை ஆழத்தோடும், உறுதியோடும் கூறியமை- மக்களுக்கு விழிப்புணர்வை எற்படுத்தியது, எங்களுக்குப் பக்கபலமாக இருந்தது.

எவ்வளவோ சர்வதேச நாடுகளின் ஆதரவுடனும், உதவியுடனும்தான் இலங்கைப் படைகள் எங்கள் மீது யுத்தத்தைத் தொடர்ந்தன. நாங்கள் இனத்தின் எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்ளும் தொடர்பயணத்தில், எதையும் விட்டுக்கொடுக்க முடியாது, பலவீனப்படுத்த முடியாது. எங்களுடைய மக்களுடைய அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு எமது அமைப்பு உறுதியாக இருக்கும்.

தமிழ் ஊடகத்துறையில் செயற்பாட்டுத்திறன் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாகக் காணப்படுகிறது. இன்று சமாதான பேச்சுவார்த்தைகளின்போது, தமிழ் ஊடகவியலாளர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரைத்தான் காணமுடிகிறது. பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள் - ஊடகவியலாளர் மாநாட்டில், கேள்விகள் ஊடாகத்தான் கருத்துக்களை வெளிப்படுத்த முடியும்.

*(தொடரும்.....)*

# இந்தியா அமைதிப்படையை ஈராக்கிற்கு அனுப்ப மறுப்பு



ஜஸ்வந்த் சின்ஹா

ஈராக்கிற்கு இந்திய அமைதி காப்புப் படையை அனுப்புமாறு அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை, இந்திய அரசு நிராகரித்துள்ளது. இத்தகைய வேண்டுகோள் ஐ.நா ஊடாக வந்தால் மட்டுமே அதனைக் கருத் தில் எடுக்கலாம் என, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்தார்.

கடந்த திங்களன்று பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைமட்ட பாதுகாப்புக்குழுக் கூட்டத்தின் பின்னரே, இந்தியாவின் இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நாவின் அழைப்பின்றி, இந்திய அமைதிப்படையை ஈராக் அனுப்புவதற்கு - இந்தியாவில் பல மட்டங்களிலும் எதிர்ப்புக்குரல் ஒலித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

• ஐ.நாவின் தலையீடு இன்றி, இந்திய அமைதிப்படை 1987 இல் இலங்கைக்குள் இறங்கி, தேவையற்ற ஓர் நீண்ட யுத்தத்தில் ஈடுபட்ட அனுபவமே இந்தியாவின் தற்போதைய முடிவுக்குக் காரணம் என, பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

விரைவில் சில இந்திய மாநிலங்களில் தேர்தல்கள் நடக்கவுள்ள நிலையில், சுமார் 17 ஆயிரம் இராணுவத்தினரை நாட்டை விட்டு வெளியே அனுப்பக்கூடிய நிலையில் வாஜ்பாய் அரசு இல்லையெனவும் கூறப்படுகிறது.

இதேவேளை - ஈராக்கிலிருந்து வெளியேறவிருந்த அமெரிக்கப்படைகளை காலவரையறையின்றி அங்கு தங்கி நிற்கவேண்டுமென, அமெரிக்கப்படை உயர் வட்டாரங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அமெரிக்கப்படைகள் மீது ஈராக்கில் அதிரடித்தாக்குதல்கள் தொடர்வதால், அமெரிக்க இராணுவத்தின் மூன்றாவது காலாட்படைப்பிரிவு அங்



எப்படியும் தாக்கப்படுவோம்...?

கேயே தரித்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உயர்மட்டத்தின் இந்தப் புதிய உத்தரவால், செப்ரெம்பர் மாதம் வீடு திரும்பவிருந்த அமெரிக்கப் படையினரும் அவர்களது குடும்பத்தினரும் கடும் விசனம் அடைந்துள்ளனர். தமக்கு ஈராக்கில் தொடர்ந்து தங்கியிருக்க விருப்பமில்லை என, அமெரிக்கச் சிப்பாய்களில் அநேகமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். கனரக ஆயுதங்களும், வெப்பமும் தம்மால் தாங்க முடியாத அளவுக்கு இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

இவர்களில் சிலர் கடந்த ஆண்டு செப்ரெம்பர் முதல் வளைகுடாவில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

# பலஸ்தீனிய இளைஞரால் 3 இஸ்ரேலியர் குத்தப்பட்டனர்!

இஸ்ரேலியத் தலைநகர் ரெல் அவிவில் - நேற்று பலஸ்தீனியர் ஒருவர் மூன்று பேரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியுள்ளார். இவர்களில் ஒருவர் பின்னர் வைத்தியசாலையில் மரணமானார். கடந்தவாரம் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்த அறிவிப்பின் பின்னர், நடைபெற்ற தாக்குதலாக இது அமைந்துள்ளது.

தாக்குதல் நடத்தியவர் இஸ்ரேலியப் பாதுகாப்புப் பிரிவினரால் காலில் சுடப்பட்டு, கைது செய்யப்பட்டார். கைதான 23 வயதான இவர், அல் - அக்ஷா தியாகிகள் படையணியைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது. ஹமாஸ் இஸ்லாமிக் ஜிகாத், பற்றா ஆகிய போராளி அமைப்புக்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட போதிலும், அல் அக்ஷா அமைப்பு, அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் படைவீரருடன் மாயமான பிரிட்டிஷ் மாணவி



ஷிவோன்

(லண்டன்)

முன்னாள் அமெரிக்க அதிரடிப்படை வீரர் ஒருவருடன் 12 வயதான பிரிட்டிஷ் மாணவி ஒருவர் காணாமற்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரையும் தற்போது பிரிட்டிஷ், ப்ரெஞ், அமெரிக்க புலனாய்வுப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

இவர்கள் இருவருக்கும் இடையில் இன்ரநெற் மூலமாகவே நட்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் பொலிஸாரின் தகவல்களின்படி, ஷிவோன் (வயது 12) என்ற இந்த மாணவியும், ரொபிஸ்ரட் பேக்கர் என்ற முன்னாள் அதிரடிப்படை வீரரும் (வயது 31) கடந்த சனிக்கிழமை மதியம் ஹீத்ரோ விமான நிலையம் ஊடாக பாரிஸ் புறப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆனால், இவர்கள் பாரிஸ் வந்து சேர்ந்தாக விமான நிலையத்தில் பதிவுகள் இல்லை என ப்ரெஞ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பேக்கர்

இம்மாணவி காணாமற்போனதற்கு மூன்று தினங்களுக்கு முன்பதாக, தனது தாயாரிடமிருந்து கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, வீட்டைவிட்டு வெளியே சென்றதாகக் கூறப்படுகிறது. இம்மாணவியை அழைத்துச் சென்றதாகக் கருதப்படும் அமெரிக்கப் படைவீரர், ஆப்கானில் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவில் பணியாற்றியபோது காயமடைந்து, தாயகம் திரும்பியவர் எனக் கூறப்படுகிறது. இவரின் முன்னாள் மனைவி புற்றுநோயால் ஏற்கனவே இறந்துவிட்டார்.

மாணவி ஷிவோரின், இறுதியாகக் கறுப்புநிற உடையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இன்ரநெற் மூலமான தொடர்பு, இந்த நிலைக்கு இட்டுச்சென்றதாக இவரின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

# பாகிஸ்தானியக் குழந்தைக்கு இந்தியாவில் இருதய சிகிச்சை



இந்திய - பாகிஸ்தான் நேரடி பஸ்சேவை கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டபோது - முதல் பஸ்ஸிலேயே, இருதய சிகிச்சைக்காக இந்தியா வந்த, பாகிஸ்தான் குழந்தை சத்திரசிகிச்சையின் பின் பூரண குணமடைந்துள்ளது. இரண்டு வயதான நூர் பாத்திமா என்ற இப் பெண் குழந்தைக்கு, பெங்களூர் வைத்தியர்கள் வெற்றிகரமாக இருதய அறுவைச்சிகிச்சை செய்து குழந்தையை பிழைக்க வைத்துள்ளனர்.

இந்தியாவில் அதிசிறந்த சிகிச்சை வசதி இருப்பதால், அக்குழந்தையை தாம் அங்கு அனுப்பியதாக பாகிஸ்தானிய வைத்தியர்கள் தெரிவித்தனர். குழந்தையின் சிகிச்சை பற்றிய தகவல்கள் நேற்றைய அனைத்து இந்திய செய்தி ஊடகங்களிலும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டன.

# யாழ்ப்பாணத்தில் நாடக வளர்ச்சி

**ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி நாட்டுக்கூத்து நாடகமன்றச் செயலாளரும், முன்னைநாள் ஐக்கிய சனசமூக நிலைய கலைத்துறைப் பொறுப்பாளரும், நாடக, நாட்டுக்கூத்து நடிகரும், இயக்குநருமாகிய "நடிக கலாமணி" அகுஸ்தீன் யேசுரட்ணத்துடனான நேர்காணல்.**



அகுஸ்தீன் யேசுரட்ணம்

***கேள்வி:*** உங்கள் நாடகத்துறையின் பிரவேசம் எவ்வாறு ஆரம்பமானது?

***பதில்:*** நான் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையில் கல்வி கற்கும்போது- எனக்கு அப்பொழுது 9 வயது இருக்கும். பாடசாலைப் பெற்றோர்தின விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக "வெற்றி" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. ஆசிரியர் றெமிசியஸ் என்னைப் பெண் வேடத்தில்- அந்நாடகத்தில் நடிக்க வைத்தார். மேடைக் கூச்சம் ஒருபுறம், பெண் வேடம் ஒருபுறம். இவற்றிடையே - வெட்கம், பயப்பீதியுடன் நடித்தேன். திருப்தி இல்லாத நடிப்பு.

அதன்பின் ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றிய திருமதி கிறீஸ்ரலோகஸ் - சிறிய சிறிய ஆங்கில நாடகங்களில் என்னையும், சக மாணவர்களையும் நடிக்க வைத்தார். மேடைக்கூச்சம், வெட்கம் படிப்படியாக நீங்கியது. அதே பாடசாலையில் "யூலியஸ் சீசர்" என்ற பிரமாண்டமான நாடகத்தில் அன்ரனி என்ற பாத்திரம் தரப்பட்டு, மிகவும் சிறப்பாக நடித்தமைக்காகப் பரிசு வழங்கப்பட்டது.

பின்னர், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இல்லப்போட்டி நாடகங்களில் பங்குபற்றும் வாய்ப்பேற்பட்டது. அதன்பின் நாடகங்கள் எங்கு நடந்தாலும் பார்க்கவேண்டும் என்ற ஆவல் என்னுள்ளத்தில் உதயமாகியது. மேடையலங்காரம், அரங்க அமைப்பு (Settings), ஒப்பனை (Make-up) இவைகளில்தான் என் முழுக்கவனமும் இருக்கும்.

***கேள்வி:*** எவ்வகையான நாடகங்களை ஆற்றுகை செய்திருக்கிறீர்கள்?

***பதில்:*** சமூக, சீர்திருத்த, ஓரங்க, வரலாற்று நாடகங்கள் எனது நெறிப்படுத்தலில் மேடையேற்றப்பட்டன. காட்சி அமைப்புகளை எனது சகோதரன் பிலேந்திரன் ஒழுங்குபடுத்துவார்.

# இன்னும் அருகிப்போகின்றது




குறிப்பாக 'ஞான ஒளி' என்ற ஓரங்க நாடகத்தில் ஒரே மேடையில் கோவிலும், இடுகாடும் அமையவேண்டும். அவற்றிற்கான கலை (Art) வடிவங்களை நாங்களே செய்துகொண்டோம். அந்நாடகம் மிகவும் சிறப்பாக அமைந்தது.

இடப்பெயர்வின்போது என்னிடம் இருந்த நாடகப் படங்கள் நிறைய அழிக்கப்பட்டுவிட்டன. அதுதான் எனக்கு மிகுந்த வேதனைதரும் சம்பவமாகும். "இன்பம் எங்கே?" என்ற நாடகத்தில் - ஒரு கனவுக் காட்சி இடம்பெறும். கதாநாயகன் முகில் கூட்டங்களுக்கு உள்ளே இருந்தும், கதாநாயகி தாமரை இதழ்கள் விரிந்தவுடன் வெளிப்படுவதுமான காட்சியைத் தத்ரூபமாக அமைத்தோம்.

எங்கள் சொந்தக் கற்பனையில்- பல நிற ஒளிகளைப் பயன்படுத்திக் காட்சியை அமைத்தோம். அந்த நினைவலைகளை எங்கள் ஊர் முன்னோர்கள் மறந்திருக்கவே முடியாது. ஒப்பனைகளையும் நானே செய்தேன்.

***கேள்வி:*** உங்களது வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்த காரணிகள் எவை?

***பதில்:*** எனது வளர்ச்சிக்குக் காரணமாகவும், சாதகமாகவும் இருந்தது - காலஞ்சென்ற எனது தந்தையாரின் கலைத்திறன்தான். மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட எனது தந்தையார் - நாட்டுக்கூத்தைப் பாடி நடிப்பதில் வல்லவராக இருந்தார். அவருக்குக் 'குழலோசை' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. பிறந்த ஊரிலும், புகுந்த ஊரிலும் அவரின் நாட்டுக்கூத்துக்கள் திருநாட்களில் மேடையேறும்.

நான் சிறுவனாக இருக்கும்போது நாட்டுக்கூத்து ஒத்திகைகளுக்குக் கூட்டிச்செல்வார். அங்குதான் நாட்டுக் கூத்தின் தாளலயங்களையும், நடிப்பையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. எனது பெரியப்பா, மானிப்பாயில் அண்ணாவியராக இருந்தவர். (காலஞ்சென்ற குருசுமுத்து) சிலவேளைகளில் தாளத்தைப் போடும்படி சொல்வார். தாளத்தில் பிழையேற்பட்டால், அவர் கை என் தலையைப் பதம்பார்க்கும். குட்டுவாங்கி, நாட்டுக்கூத்தைக் கற்றுககொண்டதால்தான் - நாட்டுக்கூத்தில் காட்டரசனாக நடித்தமைக்காக "நடிக கலாமணி" எனும் பட்டம், 08.09.1993 இல் ஐக்கிய சனசமூக நிலையத்தால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன்.

ஆனையூரில் அண்ணாவியார் தம்பித்துரையின் நெறியாள்கையில்- பாலசூரன், சங்கிலியன், பண்டாரவன்னியன், சகோதரபாசம், வரப்பிரகாசம், கண்டியரசன் போன்றவையும் - திருமதி வன்னமணி அந்தோனிப்பிள்ளையின் "புனித யூதாததேயு" நாட்டுக்கூத்துக்களிலும் நடித்துள்ளேன். சங்கிலியன் நாட்டுக்கூத்தில் சிறப்பாக நடித்தமைக்காக, காலஞ்சென்ற கலையரசு சொர்ணலிங்கம் ஐயாவினால் பாராட்டப்பெற்று, "ஈழத்தில் நாடகமும் நானும்" எனும் புத்தகம் பரிசளிக்கப்பட்டது. "யாழ் ரசிகரஞ்சனா சபையில்" நடந்த போட்டி நாடகங்களில் எங்கள் நாட்டுக்கூத்தும் மேடையேறியது. எனது நடிப்பையும், தாள லயங்களையும் உற்றுநோக்கிய கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, "கலையுலகில் கால்நூற்றாண்டு" எனும் தனது சொந்தப் புத்தகத்தை எனக்குப் பரிசளித்தார்.

***கேள்வி:*** இத்துறையினூடாக எதிர்காலத்தில் நீங்கள் சாதிக்கப் போவது என்ன?

***பதில்:*** நான் சுகயீனத்தால் பாதிப்படைந்திருக்கிறேன். இருந்தும் எனது நாடகவாயிலான பங்களிப்பு, என்றும் புதிதாக முன்னுக்குவரும் நடிகர்களைச் சென்றடையவேண்டும். ஒரு மாணாக்கன் மேடையில் நடிக்கும்போது, அவனது திறமையைப் பார்த்து ரசிக்கவேண்டுமென்பதே எனது நீண்டநாள் ஆசை.



ஆகவே, நடிப்புப்பற்றிய கலையை வளர்க்கவேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த ஆவல். ஏற்றி இறக்கிப்பேசும் வசனம், உச்சரிப்புக்கள், நிலை, பார்வை, அசைப்பு இவைகள் முக்கியமாக நாடகத்தின் அங்கமாக உள்ளன. இவைகளை ஓரளவு தெரிந்திருப்பதால், என்னால் சுலபமாகப் பயிற்சிகொடுக்க முடியும்.

ஆனால், முன்பைவிட நாடக வளர்ச்சி குன்றிவிட்டது. இளம் பிள்ளைகள் நாடகத்துறையில் அக்கறை காட்டுவது வெகுவாகக் குறைந்துவிட்டது. நாடகத்துறையில், நாட்டுக்கூத்தில் அக்கறைகாட்டுபவர்களுக்கு எனது பங்களிப்பு நிச்சயம் உண்டு. ஒரு நடிகன் கேட்டுப்படிக்கவேண்டும். பார்த்துப் படிக்கவேண்டும். தேடிப்படிக்கவேண்டும். இதில் எந்தவித வெட்கமும் இல்லை.

**சந்திப்பு - சணி**

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# அனுசரணையாளராகவே நோர்வே அரசு செயற்படும்

## கதிர்காமருக்கு சொல்ஹெய்ம் பதில்

நோர்வே - மத்தியஸ்தராக அல்ல அனுசரணையாளராகவே செயற்படும் என நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார். நோர்வேயின் தலையீடு குறித்து முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்ட கருத்துக் குறித்து - சொல்ஹெய்ம், 'ஐலண்ட்' பத்திரிகைக்கு பேட்டி ஒன்றை அளித்துள்ளார்.

கதிர்காமர், இலங்கையில் ஒரு முக்கிய அரசியல் புள்ளியாக இருப்பதால், அவரின் கருத்தைக் கவனத்தில் எடுத்துள்ளேன் என அவர் குறிப்பிட்டார்.

கண்காணிப்புக்குழு குறித்து கருத்து வெளியிட்ட சொல்ஹெய்ம், இந்தியா உட்பட வேறு எந்த நாட்டைச் சேர்ந்தவர்களும் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவதில் ஆட்சேபம் இல்லை. ஆனால், இதை இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் சொல்ஹெய்ம் தனது பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பிரசன்னா கணனிக்கல்வி நிலையம்

K.K.S ரோட் சுன்னாகம்

எமது நிலையத்தில் குறைந்த செலவில் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள்.
- றோணியோ வேலைகள்.
- **Printing (Lazer And Dotmatic, Colour)**
- **Scanning**
- **CD Writing(MP3, Audio,Vidio)**
- **Computer sales and Repairing**

### லெப்.சீலன்...

மேற்படி இரு மாவீரர்களினதும் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன. லெப்.சீலனின் உருவப்படத்தை, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும், வீரவேங்கை ஆனந்தின் உருவப்படத்தை கொடிகாமம் பிரதேச சபை செயலாளரும் திரைநீக்கம் செய்துவைத்தனர்.

அங்கு நினைவுக்கல்லுக்கு, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவுத்தூபிக்கு பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து- நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் அஞ்சலி உரையும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியின் அஞ்சலியுரையும் இடம்பெற்றது.

### நாதஸ்வர வித்துவான்...

போது இவருக்கு வயது 72 ஆகும்.

இவரது பூதவுடல், இன்று காலை 10 மணிக்கு கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளது. அளவெட்டி வடக்கைச் சேர்ந்த என்.கே.பத்மநாதன், 1931 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 31 ஆம் திகதி பிறந்தார். இவர், எட்டாவது வயதில் கலையுலகில் பிரவேசித்தார்.

சிறுவயதிலே பலராலும் பாராட்டுப்பெற்ற பத்மநாதன் வெளிநாடுகளுக்குச் சென்று, நாதஸ்வர இசை நிகழ்ச்சிகளை நடத்தித் தனக்கென ஒரு இடததைப் பெற்றிருந்தார்.

1999 ஆம் ஆண்டு, கலையுலகில் ஆற்றிய பணிக்கு ஆளுநர் விருது இவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன் கலைமாமணி, கலாசூரி, நாதஞானபாரதி, கலாநிதி, நாதஸ்வர சக்கரவர்த்தி போன்ற பல்வேறு பட்டங்களையும் இவர் பெற்றிருந்தார்.

64 வருட கலைப்பயணத்தை முடித்துக்கொண்ட என்.கே.பத்மநாதனின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. (ச)

### போர் நிறுத்த உடன்பாட்டில்...

பிரச்சினை ஏற்படும்போது, எம்மை அங்கு அழைத்துச் 'செல்வோம் என உறுதியளித்த போதிலும், எம்மை அழைத்துச் செல்லாத நிலையில் தான், கடலில் மோதல் நடைபெற்றுள்ளது.

எனவே- இதுகுறித்து என்னால் நேரடியான கணிப்பை வெளியிட முடியாது. போர் மூலம் இனமுரண்பாட்டைத் தீர்க்க முடியாது. எம்மிடம் துப்பாக்கிகள் இல்லை. பேச்சு வார்த்தையே எமது ஆயுதம். கடந்த ஒன்றரைவருட போர்நிறுத்த உடன்படிக்கை குறித்து நான் முழுமையாக திருப்தியடையவில்லை.

சமாதானம் குறித்து அரசியல் ரீதியான ஆர்வமும், எதிரான கருத்துகளும் காணப்படுகிறது. இதனால் சமாதானம் விவாதத்திற்குரிய ஒரு விடயமாகியுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் - கடற்புடை ரோந்து செல்வதற்கும், சோதனை செய்வதற்கும் உரிமை இருக்கும் அதே சமயம் சோதனையிட்ட கப்பலை மூழ்கடிக்க முடியாது. எமது நோர்வே நாடும், கரையோரக் காவல் படையைக் கொண்டிருக்கிறது. ஆனால், எவற்றையும் தாக்கி மூழ்கடிக்கும் ஆயுதம் ஏதும் அதனிடம் இல்லை. எம்மிடம் உள்ள ஒரே ஆயுதம் 'நாம் உங்களுடன் பேச விரும்புகின்றோம்' என்ற ஒரே வசனம்தான். கப்பலை சோதனையிடுவோம், மூழ்கடிக்கமாட்டோம். இவ்வாறே நோர்வே கடற்படை செயற்படுகிறது. இதே சமயம் - கடற் சட்டப்படி எதிரேவரும் எந்தக் கப்பலும் அடையாளக் கொடியைத் தம் கப்பலில் பறக்கவிடவேண்டும்.

நாம் நேர்மையாகவே செயற்படுகிறோம். அதில் எவரும் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. அனைவரையும் சமமாகவே நோக்குகின்றோம். நாம் முடிந்த அளவு, நடுநிலைமையுடனேயே செயற்படுகிறோம் என்றார்.

### வடமராட்சி...

பாளர், யுத்தநிறுத்தக் கண்காணிப்புகுழு மற்றும் 524 ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரிக்கும் தெரியப்படுத்தினார்.

சம்பவ இடத்திற்கு வந்த இராணுவ அதிகாரிகள் நேரில் பார்வையிட்டதையடுத்து, சோதனையிட்டுக் கொண்டிருந்த படையினரும், பொலிஸாரும் தமது சோதனை நடவடிக்கையை இடைநிறுத்திவிட்டுச் சென்றனர்.

இதேவேளை - வல்லை மற்றும் முள்ளிப்பகுதிகளிலும் வாகனங்களை வழிமறித்து படையினரும், பொலிஸாரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வல்லை சோதனைச் சாவடியில் வழமையைவிட அதிகமான படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்ததுடன் வாகனங்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதேபோல் - முள்ளிப்பகுதியிலும், படையினர் - வீதியால் சென்ற மக்களையும், பஸ் வண்டிகளில் சென்ற பயணிகளை இறக்கியும் சோதனையிட்டனர்.

### 20 மில். டொலர்....

இராணுவ மையங்கள், ர.ஃபேல் ஆயுத அபிவிருத்தி அதிகாரசபை, இலத்திரனியல் ஆயுத உற்பத்தி நிறுவனங்களான எல்பிட் மற்றும் எல்- ஒப் ஆகியவற்றுக்கு விஜயம் செய்தது.

இந்த விஜயம் முதலில் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதிலும், கொழும்பு வாரப்பத்திரிகை ஒன்று தகவலை வெளியே கசிய விட்டது தெரிந்ததே.

## இரண்டு மாவீரர்களுக்கு நினைவுக்கற்கள் நடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து கடந்தமாதம் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிய - லெப். கேணல் வீரமணி அல்லது செந்தமீழ், மேஜர் வள்ளுவன் ஆகியோரின் நினைவுக்கற்கள் நேற்று நடப்பட்டன.

லெப்.கேணல் வீரமணி அல்லது செந்தமிழின் திருவுருவப்படம்- வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக உடுத்துறையிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நேற்று மாலை 4.00 மணியளவில் நினைவுக்கல் நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில் - கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி மற்றும் போராளிகள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மேஜர் வள்ளுவனின் திருவுருவப்படம் - சங்கானையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர், அங்கிருந்து ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு நினைவுக்கல் நடப்பட்டது. இந்த நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கல்லடியில் கைதான புலிகள்; வெள்ளி வரை விளக்கமறியல்!

மட்டக்களப்பு - கல்லடிப் பால பொலிஸ் சோதனைச்சாவடியில் நேற்றுமுன்தினமிரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு பெண் போராளிகள் உட்பட எட்டு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களையும்- எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் ஏ.எல்.அப்துல் கபூர் உத்தரவிட்டார்.

இந்த எட்டுப் பேரும் நேற்று பிற்பகல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, ஆபத்தான ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர்களிடமிருந்து ஆயுதங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

எட்டுச் சந்தேக நபர்களுக்கும் எதிராக, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதா இல்லையா என்பது தொடர்பான தீர்ப்பை, எதிர்வரும் வெள்ளிக்கிழமை வழங்குவதாக தெரிவித்த நீதிவான் - அதுவரை, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து, போராளிகள் எட்டுப்பேரும், பலத்த பாதுகாப்புடன் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## கடலில் காவியமான மாவீரர்களின்...

விடுதலைப் புலிகளின் நல்லூர்க் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன், கி.கிறிஸ்தோபர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து 12 மாவீரர்களினதும் திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணியப்பட்டன. இந்நிகழ்வில், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் மற்றும் கிராமசேவையாளர் ஆனந்தராஜா ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். கடற்புலிகளின் வலிகாமம் அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் நினைவுரை நிகழ்த்தினார்.

வடமராட்சியில் - வல்வெட்டித்துறையில், நெடியகாடு பிள்ளையார் கோவில் மைதானத்திலிருந்து நேற்றுக்காலை 11.30 மணியளவில், 12 மாவீரர்களின் உருவப்படங்களை மாணவர்கள் - பாண்ட் வாத்திய இசையுடன் பிரதான வீதி வழியாக ஊர்வலமாக எடுத்துச்சென்று, வல்வெட்டித்துறை அம்மன் கோயிலில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைத்தனர்.

பின்னர் - நண்பகல் 1 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க செயலாளர் தம்பிராசா நவம் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில், விடுதலைப் புலிகளின் வல்வெட்டித்துறை பிரதேசப் பொறுப்பாளர் கிசோர் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார். விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா தேசியக் கொடியினை ஏற்றினார்.

யாழ்.மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி சிறப்புரையாற்றினார்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் - காலை 10 மணிக்கு, 12 மாவீரர்களின் உருவப்படங்களை பாண்ட் வாத்திய இசையுடன் மாணவர்கள், மக்கள், போராளிகள் இணைந்து - நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துவந்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைத்தனர்.

பின்னர், நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சு.கணேசலிங்கம் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது- பொதுச்சுடரினை மாவீரர் நாதனின் தந்தையான எஸ்.பாக்கியராசா ஏற்றி வைத்தார்.

தேசியக்கொடியினை நெடுந்தீவு அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் ஈழமாறன் ஏற்றிவைத்தார். மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு நெடுந்தீவிலுள்ள மாவீரர்களின் பெற்றோர் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர். இந்த நிகழ்வில், நெடுந்தீவுக் கல்விக் கோட்ட அதிகாரி, பாடசாலை அதிபர்கள், நெடுந்தீவு மக்கள் ஒன்றியத் தலைவர் ஆகியோர் உரையாற்றினர்.

தீவகப் பகுதிகளில் - நயினாதீவு மகாவித்தியாலயத்திலும், அல்லைப்பிட்டி அ.த.க. பாடசாலையிலும், புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும் 12 மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வலிகாமம் கோட்டத்தில் - சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய் ஆகிய இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை, வவுனியாவில் - நேற்றுமாலை 5 மணிக்கு தோணிக்கல் விளையாட்டு மைதானத்தில், 12 மாவீரர்களுக்குமான அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் - வவுனியா மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செங்கதிர், நிர்வாக சேவை பொறுப்பாளர் தங்கையா ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு அஞ்சலி உரையாற்றினர்.

மன்னாரில் - 12 மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வு, நேற்றுமாலை 5.45 மணிக்கு மன்னார் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்றல்மாறன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - தேசிய கொடியை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரை கடற்புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் மேனன் ஏற்றினார். மக்கள் கொள்கை முன்னெடுப்பாளர் நெடுமாறன், மன்னார் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் சகாயம் பீரிஸ் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர். (201,03,124,113,91)

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி (குழந்தை) 15.07.2003 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் கணபதிப்பிள்ளையின் மனைவியும், நகுலேஸ்வரன், திரவியராணி (வவி), அமரர் நிர்மலானந்தன், மகேந்திரராஜா, இராசமலர் (மணி), சுசிலாதேவி (ஜேர்மனி), குனேந்திரராஜா (ஜேர்மனி), ரவீந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசமணி, அமரர் சிவாஜி, யோகராணி (கனடா), சாந்தி, இராஜமோகன் (நமது ஈழநாடு), அமரர் பத்மநாதன் (ஜேர்மனி), சீலா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், மாலா, மோகன், உஷா, குமார், அமரர் பிரகாஷ், கல்யாணி, பிரசன்னா, இந்துஜா, கஜன், தனுஜா, பிரியா, சாளினி, மயூரி, கிரிகரன், பிரியா, நிரோ, கரன், நிலுஜா, கபிலன், கஜன் ஆகியோரின் பேர்த்தியும், சுகன்ஜாவின் பூட்டியும், உலகேஸ்வரி (பாப்பா), அமரர்களான யோகேஸ்வரி, உலகேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 16.07.2003 (புதன்கிழமை) இன்று காலை 10.00 மணியளவில் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*கட்டுடைவளவு,*
*மானிப்பாய்.* (சி-1238) **குடும்பத்தினர்.**

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1529 திகதி: 15.07.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | 0 | 3 | 2 | 1 | 7 | 3 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.